ௐ

ஹிந்து தர்ம ஞானம்

ஓர் எளிய அறிமுகம்

அஞ்சல்வழி ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு

3

ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
திருவண்ணாமலை.

தாய் அமைப்பு :
தர்ம ரக்ஷண ஸமிதி
தமிழ்நாடு





நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இருக்கும்போது,
ஞானம் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்,
நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இல்லாவிடிலோ
ஞானத்தை அடையவே முடியாது.
நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இருந்தால்,
ஞானத்தை அடையலாம்.
" ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை "

பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

ஹிந்துவே ! எழுந்திரு, உன் சமயத்தைப் புரிந்து கொள்.
உன்னுடைய பெருமையை வெளிப்படுத்து.

'சாஸ்த்ரம்' என்ற சொல்லுக்கே,
நன்மையை உபதேசித்து, துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவது
என்று தான் பொருள். சாஸ்த்ரங்கள் கண்ணாடியைப் போன்று நம்மை
நமக்குக் காட்டும் ஆற்றல் படைத்தவை. பிறவித் தளைகளிலிருந்து
விடுபட்டு, மனிதன் பேரானந்தத்தை உணரும் வழியை சாஸ்த்ரங்கள் த
நமக்கு உணர்த்துகின்றன.

இதற்காக உருவாக்கப் பெற்றதுதான்
'ஹிந்து தர்ம ஞானம்' அஞ்சல் வழிக் கல்வி.

மெய்யன்புடையீர் ! படிப்பீர் ! பயன்பெறுவீர் !
உளங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.
ஆதி குருவின் அருட்பணியில்,

பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமீ ஓங்காரானந்
தலைவர், தர்ம ரக்ஷண ஸமிதி

ௐ

ஹிந்து தர்ம ஞானம்

அஞ்சல் வழிக் கல்வி

ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு
பாடப் புத்தகம்

தொகுப்பு
3
ஆனி

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
திருவண்ணாமலை


தாய் அமைப்பு

தர்ம ரக்ஷண ஸமிதி
தமிழ் நாடு

வெளியீடு : பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
சுத்தானந்த ஆஶ்ரமம்,
36, கிரிவலப் பாதை,
அடிஅண்ணாமலை,
திருவண்ணாமலை - 606 604.
தொலைபேசி: 04175-232 153
செல்லிடைப்பேசி: 9500082794
மின்னஞ்சல்: cbdcstn@gmail.com

முதல் பதிப்பு	: விஜய வருடம் (2013-14)	- 2,000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு	: ஜய வருடம் (2014-2015)	- 1,600 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	: மன்மத வருடம் (2015-2016)	- 1,000 பிரதிகள்
நான்காம் பதிப்பு	: துர்முகி வருடம் (2016-2017)	- 2,300 பிரதிகள்
ஐந்தாம் பதிப்பு	: ஹேவிளம்பி வருடம் (2017-2018)	- 1,000 பிரதிகள்
ஆறாம் பதிப்பு	: விளம்பி வருடம் (2018-2019)	- 600 பிரதிகள்
ஏழாம் பதிப்பு	: விகாரி வருடம் (2019-2020)	- 500 பிரதிகள்
எட்டாம் பதிப்பு	: சார்வரி வருடம் (2020-2021)	- 300 பிரதிகள்

அச்சிட்டோர் : LKM Computer Printers, Chennai - 17
Phone : 9940682929



பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

ௐ

அருளாசி

ஹிந்து தர்மம் என்பது வாழ்க்கையின் குறிக்கோளையும் அதை அடைய வேண்டிய வழியையும் கொண்டது; உண்மையை அடிப்படையாகக் கொண்டது; இந்த அஞ்சல்வழிக் கல்வித் திட்டத்தை வரவேற்று ஆசீர்வதிக்கிறேன். ஹிந்துக்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தில் இணைந்து ஹிந்துக்களாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி
நிறுவனர்
தர்ம ரக்ஷண ஸமிதி

"ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை"
"ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரம் இஹ வித்யதே"

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

அருள் வாழ்த்துரை



ஹிந்து தர்ம ஞானப் பயிற்சித் திட்டத்தில் ஹிந்துக்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுமென்று ''சேரவாரும் செகத்தீரே'' என்ற தாயுமானவரின் அருள்மொழியினைச் சிந்தித்து அன்போடு அனைவரையும் அழைக்கின்றேன்.

இதன் வாயிலாக ஹிந்து தர்ம விஷயங்களை நன்கு அறிந்துகொள்வோம். ஆர்வத்துடன் அவைகளைக் கடைப்பிடிப்போம். அனைவரையும் இதில் ஈடுபடுத்தி நாம் பெற்ற இன்பத்தைப் பிறருக்கும் வழங்குவோம்.

காலத்தை வென்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஹிந்து தர்மத்தை எல்லாவிதமான நல்ல முயற்சிகளின் துணைகொண்டு பாதுகாப்போம். உண்மையான மனிதநேயத்தை உலகுக்கு உணர்த்துவதே ஹிந்துமதம் என்பதை நிரூபிப்போம். தெய்வீகமான இந்த பாரதநாட்டை ஹிந்து தர்மத்தின் வாயிலாகப் பாதுகாக்க உறுதி பூணுவோம்.

ஊதுமினோ வெற்றி! ஒலிமினோ வாழ்த்தொலிகள்
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகண்டோம்;
வேதனைகள் இனிவேண்டா, விடுதலையோ திண்ணமே.

-பாரதியார்

ஸ்வாமி ஓங்காரானந்த

தலைவர், தர்மரக்ஷண ஸமிதி.

ௐ

ஹிந்து தர்ம ஞானம்

பொருளடக்கம்

ௐ

பிரார்த்தனைப் பாடல்கள்

1. கு^{3}ரு த்^{4}யாநம்
(குருவை தியானித்தல்)



ஈஶ்வரோ கு^{3}ருராத்மேதி மூர்திபே^{4}த விபா^{4}கி^{3}நே|
வ்யோமவத் வ்யாப்த தே^{3}ஹாய த^{3}க்ஷிணா மூர்தயே நம: ||

பதவுரை:

ஈஶ்வர:	-	இறைவன்
கு^{3}ரு:	-	ஆசான்
ஆத்மா	-	'நான்' என்னும் ஆத்மா
இதி	-	என்று
மூர்தி பே^{4}த விப^4ாகி^{3}நே	-	பல்வேறு உருவங்களில் காணப்படுபவருக்கு
வ்யோமவத்	-	ஆகாயம் போல்
வ்யாப்த தே^{3}ஹாய	-	எங்கும் நிறைந்து இருப்பவருக்கு
த^{3}க்ஷிணா மூர்தயே	-	தக்ஷிணாமூர்த்திக்கு
நம:	-	நமஸ்காரம்.

பொருள்: ''இறைவன், ஆசான், ஆத்மா என்று பல்வேறு உருவங்களில் காணப்படினும், ஆகாயம் போல் எங்கும் நிறைந்திருக்கும் தக்ஷிணாமூர்த்திக்கு (தென்முகக் கடவுள்) நமஸ்காரம்.''

தக்ஷிணாமூர்த்தி (தென்முகக் கடவுள்)

கல்லாலின் புடை அமர்ந்து நான்மறை ஆறங்கம் முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கு இறந்த பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.

- பரஞ்சோதியார் (திருவிளையாடல் புராணம்)

பொருள்: ஸநகர், ஸநந்தர், ஸநாதநர், ஸநத்குமாரர் ஆகிய முனிவர் நால்வரும் நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் கற்றுக் கேள்வி அறிவும் வாய்க்கப் பெற்றவர்கள். அந்நால்வருக்கும் சிவபெருமான் கல்லால மரத்தின் கீழ்த் தென்முகக் கடவுளாகத் தெற்கு நோக்கி எழுந்தருளி இருந்து சின்முத்திரையால் (அறிவு அடையாளக் கையால்) பொருள் உண்மைகளை உணர்த்தினார். சொல்லைக் கடந்த முழுமுதற் பொருளாகவும் வேதங்களைக் கடந்தும் அனைத்துப் பொருளாகியும் அவற்றின் வேறாகியும் விளங்கும் ஸத்துப் பொருளை, அமர்ந்திருந்த நிலையிலேயே, வாய்மொழியால் எதனையும் வளர்க்காமல் சின்முத்திரையால் உண்மையை உணர்த்தி அருளினார். அந்தத் தென்முகக் கடவுளை வேறு எதனையும் நினைக்காமல் முழுமையாக நினைத்து வழிபட்டு பிறவிப் பிணியை நீக்குவோமாக.

2. ஸூரியன்

ஏஷ ப்^{3}ரஹ்மா ச விஷ்ணுஶ்ச ஶிவஸ்ஸ்கந்த^3: ப்ரஜாபதி: |
மஹேந்த்^{3}ரோ த^{4}நத^3: காலோ யம: ஸோமோ ஹ்யபாம் பதி: ||

– ஆதித்ய ஹ்ருதயம் – 8

(அகஸ்திய முனிவர் ஸ்ரீராமருக்கு உபதேசித்தது)

பதவுரை:

ஹி	-	உண்மையில்
ஏஷ:	-	இவர்
ப்^{3}ரஹ்மா	-	பிரம்மதேவன்
ச	-	மற்றும்
விஷ்ணு:	-	எங்கும் நிறைந்தவர்(நாராயணர்)
ச	-	மற்றும்
ஶிவ:	-	சிவபெருமான்
ஸ்கந்த^3:	-	பற்றுக்கோடாக இருப்பவர் (முருகன்)
ப்ரஜாபதி:	-	நம் தலைவராக இருப்பவர்
மஹேந்த்^{3}ர:	-	இந்திரன்
த^{4}நத^3:	-	செல்வம் அளிக்கும் குபேரன்
கால:	-	காலம்
யம:	-	மரணதேவனான யமன்
ஸோம:	-	சந்திர தேவன்
அபாம் பதி:	-	நீருக்கு அதிபதியான வருணபகவான்

பொருள்:

உண்மையில் ஸூர்யனே ப்ரஹ்ம (ப்ரம்ம) தேவனாகவும், விஷ்ணுவாகவும், சிவபெருமானாகவும் ஸுப்ரஹ்மண்யராகவும் ப்ரஜாபதியாகவும், மஹேந்த்ரனாகவும், செல்வத்தைக் கொடுக்கும் குபேரனாகவும், காலமாகவும், மரணதேவனான யமனாகவும், சந்த்ர தேவனாகவும், நீருக்கு அதிபதியான வருணனாகவும் இருக்கிறார்.

ஞாயிறு வணக்கம்

சுருதியின் கண் முனிவரும் பின்னே
தூமொழிப் புலவோர் பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமையென்று ஏத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்
பரிதியே பொருள் யாவிற்கு முதலே
பானுவே! பொன்செய் பேரொளித் திரளே
கருதி நின்னை வணங்கிட வந்தேன்
கதிர்கோள் வாண்முகம் காட்டுதி சற்றே

-மஹாகவி பாரதியார்.

பொருள்:

வேத முனிவர்களுடன் தேவமொழியாம் தமிழ் அறிஞர்கள் பலருடனும் யாமும் உந்தன் பெரிதான பெருமையைப் போற்றிப் பாடி வாழ்த்த வந்துள்ளோம். ஞாயிறே! படைக்கப்பட்ட பொருள்கள் யாவினுக்கும் முதற்பொருளே! கதிரவனே! பொன்னொளிர் கிரணங்கள் உடையவனே! நின்னை வணங்க வந்த எனக்கு உன் வாள் போன்ற கதிர்களையுடைய ஒளி முகத்தைச் சற்றே காட்ட மாட்டாயா!

3. அம்பாள்

ஸர்வ மங்க^{3}ல மாங்க^{3}ல்யே ஶிவே ஸர்வார்த^{2} ஸாத^{4}கே|
ஶரண்யே த்ர்யம்ப^{3}கே கெ^{3}ளரி நாராயணி நமோஸ்து தே||

பதவுரை:

ஸர்வ மங்க^{3}ல மாங்க^{3}ல்யே	-	எல்லா மங்களங்களுக்கும் மங்களமாக இருப்பவளே
ஶிவே	-	சிவபெருமானின் நாயகியே
ஸர்வார்த^{2} ஸாத^{4}கே	-	எல்லாவிதமான இச்சைகளையும் பூர்த்தி செய்வதற்கான வழியானவளே
ஶரண்யே	-	எல்லோருக்கும் புகலிடமானவளே
த்ர்யம்ப^{3}கே	-	மூன்று கண்களை உடையவளே
கெ^{3}ளரி	-	குறைவற்ற மேனி நிறமுடையவளே
நாராயணி	-	நாராயணன் தங்கையே
தே	-	உனக்கு
நம:	-	நமஸ்காரம்
அஸ்து	-	இருக்கட்டும்.

கருத்துரை:

மங்களங்களுக்கெல்லாம் மங்களமாக இருப்பவளே, சிவபெருமானின் நாயகியே, எல்லாவிதமான இச்சைகளையும் பூர்த்தி செய்வதற்கான வழியானவளே,

எல்லோருக்கும் புகலிடமானவளே, மூன்று கண்களை உடையவளே, குறைவற்ற மேனி நிறமுடையவளே, தேவியே! உனக்கு என் நமஸ்காரம் இருக்கட்டும்.

அம்மை அபிராமி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

- அபிராமி பட்டர் (அபிராமி அந்தாதி)

பொருள்: மேகம் போன்ற பூச்சூடிய கூந்தலை உடைய அபிராமி அன்னையின் கடைக்கண் பார்வை அடியவர்களுக்குச் செல்வத்தை அளிக்கும்; கல்வியை அளிக்கும்; ஒரு நாளும் தளர்ச்சியை அறியாத மனத்தை அளிக்கும்; தெய்வ ஒளியை உடைய வடிவத்தையும் தரும்; உள்ளத்தில் வஞ்சனை இல்லா நல்லவர்களின் கூட்டுறவை அளிக்கும்; நல்லவை அனைத்தையும் நல்கும்.

உன்னிடம் நம்பிக்கை கொள். நீங்கள் தானே ஒரு காலத்தில் வேத ரிஷிகளாக இருந்தீர்கள்; இப்போது வேறு உடல் தாங்கி வந்திருக்கிறீர்கள்; அவ்வளவு தான். உங்களிடம் எல்லையற்ற சக்தி இருப்பதை நான் என் ஞானக் கண்களால் காண்கிறேன். அந்தச் சக்தியைக் கிளர்ந்து எழச்செய். எழுந்திரு, எழுந்திரு.

- ஸ்வாமி விவேகானந்தர்

1. அன்னை பூமி பாரதம்
(மாத்ருத்வம்)

ஹிமயம் முதல் குமரி வரை வாழும் அத்தனை ஹிந்துக்களும் தாங்கள் வாழும் பூமியை(மண்ணை) நதியை, செடியை, கொடியை, மொழியை தாயாகப் பார்க்கும் மனோபாவம் பொதுவானது. இத்தகைய ஆழமான உணர்வுகளை அத்தனை ஹிந்துக்களிடத்தும் நம் முன்னோர்கள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். தமிழர் மதம், தமிழர் பண்பாடு என அந்நிய கிறிஸ்தவ மிஷனரிகளிடம் இரவல் வாங்கிய திராவிட மாயைக்கு ஆளாகிய திராவிடக் கழகத்தினரும் அவர்களுக்குத் துணை போகும் தேச விரோதக் கும்பல்களும் பல கூட்டங்கள் போட்டும் தெய்வீகத் தமிழ் மண்ணில் போலிப் பகுத்தறிவுக் கருத்துக்கள் வேரூன்றவில்லை.

உண்மையில் ஹிந்து மதமே தமிழர் மதம்; தமிழ்ப் பண்பாடே ஹிந்துப் பண்பாடு. இந்தப் புண்ய பூமி பாரதம் ஒரே நாடு; ஒரே தர்மம்; ஒரே பண்பாடு கொண்டது.

புண்ய பூமி பாரதம்

இப் பூவுலகிலே எந்தத் தேசமேனும் புண்ய பூமி என்னும் பெயருக்கு உரிமையுடையதானால் அது நம் பாரத நாடேயாகும்.

எல்லா உயிர்களும் தம் வினைப் பயனைத் துய்ப்பதற்கும் வைதிகக் கர்மாக்கள் மூலம் ஆன்மிக முன்னேற்றத்திற்கான ஸம்ஸ்காரங்களைப் பெறுவதற்கும் வந்து சேர வேண்டிய தேசமும் நம் பாரதமே.

கடவுளை அடையவும், பிறப்பு இறப்பு என்கிற சூழலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு முக்திப் பேறடையவும் ஒவ்வொரு ஜீவனும் இறுதியாகப் பிறப்பெடுக்க வேண்டி வந்தடையும் நாடும் நம் பாரத தேசமேயாகும்.

மனித ஸமூகத்தின் பெருந்தன்மை, தயாளத் தன்மை, தூய்மை, சாந்தம் என்னும் குணங்கள் பரிபூரணம் அடைந்திருப்பதும் நம் பாரத தேசத்திலேயேதான்.

ஆன்மிக வாழ்வு உலகியல் வாழ்வு எனத் தனித்தனியாகப் பார்க்காமல் உலகியல் வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் ஆன்மிகத்தை ஓடவிட்ட உயரிய நாடு நம் பாரததேசமே.

''இந்தப் பூவுலகில் புனிதமான புண்யபூமி என்று உரிமை கொண்டாட ஏதாவது ஒரு நாடு இருக்குமானால், பூவுலக ஜீவர்கள் தம் கர்ம பலன்களை கழிக்க வேண்டிய ஒரு நாடு என்று ஒன்று இருக்குமானால் இறைவழியை நோக்கிச் செல்லும் ஒவ்வோர் ஜீவனும் தன் இறுதி வீடாக வந்தமைய வேண்டிய நாடு என்று ஒன்று இருக்குமானால் அது பாரத தேசமேயாகும். மனித குலம் அன்பின் சிகரத்தை, பரந்த உள்ளத்தின் உச்ச நிலையை, தூய்மையின் உயரத்தை அமைதியின் எல்லையை எல்லாவற்றுக்கும் மேலாக ஆத்மிக உள் நோக்கின் சிகரத்தை ஈட்டிய நாடு என்று ஒன்று இருக்குமானால் அது தான் பாரதமாகும்.''

-ஸ்வாமி விவேகானந்தர்.

நம் நாட்டுக்குரிய அடைமொழிகள் அனைத்துமே நம் தாயகத்தின் ஆன்மிக இயல்பைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

கர்ம பூமி, ஞானபூமி, தர்மபூமி, மோக்ஷபூமி, யோக பூமி, புண்ய பூமி- என்றெல்லாம் நம் நாட்டை நாம் புகழ்கிறோமே- இவையனைத்தும் நம் பாரதத்தின் விசேஷத் தன்மையாகிய ஆன்மிகத்தையே சுட்டிக் காட்டுகின்றன.

நம் நாடுபோல மற்ற உலக நாடுகளும் பல்வேறு துறைகளில் பல ஸாதனைகளைச் செய்திருந்தாலும் புண்யபூமி, கர்மபூமி, மோக்ஷபூமி, தர்மபூமி, ஞானபூமி என்று நாம் பிரகடனப்படுத்தும்போது உலகில் வேறெந்த நாட்டவரும் தங்கள் பூமியும், மோக்ஷபூமி, புண்யபூமி என்று குரல் எழுப்பியதே இல்லை.

மோக்ஷ பூமி பாரதம் - ஒரே லக்ஷியம்

மனித வாழ்வின் நோக்கம் இறைவனை உணர்வதாகிய மோக்ஷமே என்று முதன் முதலாகத் தெளிவாகக் கூறியவர்கள் நம் ஹிந்து ஸமுதாயத்தைச் சேர்ந்த ரிஷி முனிவர்களே. அத்தகைய மோக்ஷத்தை அடையும் ஸாதனா பூமியாக விளங்கும் இந்த பாரதம் மோக்ஷ பூமியாகக் கருதப்படுகிறது.

"கா³யந்தி தே³வா:கில கீ³தகானி
த⁴ன்யாஸ்துதே பா⁴ரத பூ⁴மி பா⁴கே³ |
ஸ்வர்கா³பவர்கா³ஸ்பதஹேது பூ⁴தே
ப⁴வந்தி பூ⁴ய: புருஷா ஸுரத் வாத் ||

- விஷ்ணு புராணம் (2-3-24)

பொருள்: ஸ்வர்க்க லோகத்திற்கும் மோக்ஷ லோகத்திற்கும் நுழைவாயிலாய் விளங்கும் பாரத பூமியில் பிறக்கும் மானுடர்கள் தேவர்களைக் காட்டிலும் பாக்யவான்கள் என்று தேவர்களாலேயே புகழப்படும் பூமி இது.

கடவுளை தரிசித்தவர்கள், கடவுளோடு பேசியவர்கள் இந்த மண்ணைத் தவிர வேறெங்கும் பிறந்ததாக வரலாறே இல்லை. கடவுளையடையுமுன் ஜீவன் இந்த மண்ணில் பிறப்பெடுக்க வேண்டும் என்பது இதனால் தான்.

ஸாதாரணமாக மனிதப் பிறவியில் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்ற நிலை இருந்தாலும் முக்தி பெறும் பக்குவம் பெற்ற ஜீவன்கள் முன் ஜன்ம நுகர்வினை (ப்ராரப்த கர்மா) காரணமாய் விலங்குகளாய்ப் பிறக்க நேரிட்டாலும் அவைகளுக்கும் அந்த விலங்கு உடலிலிருந்தே மோக்ஷம் அளித்து இறைவன் தன்னோடு ஐக்யப்படுத்திக் கொண்டுள்ளான்.

'ஆதி மூலம்' என்றழைத்த கஜேந்திரன் என்ற யானைக்கு முக்தி அளித்த வரலாறு நாம் அறிந்ததே; திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் இறைவனை வழிபட்டதும் நாம் அறிந்த ஒன்றுதான்; திருச்சியை அடுத்த திருவெறும்பூரில் எறும்பு இறைவனைப் பூஜித்து மோக்ஷம் அடைந்தது ஸ்தல புராண வரலாறு.

ஆடும், மாடும், அணிலும், குரங்கும், புலியும், சிங்கமும், பாம்பும், மயிலும் எனப் பறவை விலங்கினங்கள் அனைத்தும் இறைவனை வழிபட்டு உய்வு பெற்ற வரலாற்றை நாம் காண முடிகிறது.

ஆழ்வார்கள் தங்களது பாடல்களில் மீனாய் திருவேங்கடச் சுனையில் பிறக்க மாட்டோமோ என்று ஏங்கியதைப் பாடிப் பரவசமடைகிறோம்.

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வாளாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய் பிறக்கும் விதியுடையன் ஆவேனே
-குலசேகராழ்வார்

மற்ற நாடுகளில் மனிதர்களாகப் பிறப்பதைக் காட்டிலும் இந்தப் புண்ணிய தேசத்தில் மீனாகவோ மானாகவோ மரமாகவோ பிறப்பது எத்தனையோ வகையில் மேல் என்று பலஞானிகள், மஹான்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நம் புராணங்களில் ஒரு விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது: 'எந்த பூமி, தவம் மேற்கொள்ளத்தக்க தூய பூமி என்றும், எந்த பூமியில் கடவுளை தரிசிக்க இயலும் என்றும் எழுப்பப்பட்ட ஒரு வினாவிற்கு **'க்ருஷ்ணஸாரம்ருகம்'** பூமியின் எந்தப் பகுதியில் காணப்படுகிறதோ அதுவே கடவுளை உணர்வதற்கு ஏற்ற பூமி' என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அது நம் பாரதமே.

கருவிலே திருவுடையோர் நாடு- அமரபாரதம்.

தாயின் கருப்பையில் வாஸம் செய்யும் பொழுதே தான் ப்ரும்மம்தான் என்று உணர்ந்த **வாமதேவர்** உதித்த நாடு இது.

குழந்தைப் பருவத்திலேயே இறைவனது நாமத்தை உச்சரித்தும், உயிரைத் துச்சமென எண்ணி சொல்லொணாத் துன்பங்களுக்கு இடையேயும் **'ஓம் நமோ நாராயணாய'** என்ற நாமத்தைத் திரும்பத்திரும்ப

உச்சரிப்பதிலேயே ஆழ்ந்து மகிழ்வுற்றிருந்த **ப்ரஹ்லாதன்** தோன்றிய நாடு நம் பாரத நாடு.

அறியாப் பருவத்திலேயே கடவுளைக் காண கடுந்தவம் புரிய கானகம் சென்று ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்த **துருவன்** வாழ்ந்த மண் இது.

யமனை நேரில் சந்தித்து ஆத்மஞான உபதேசம் பெற்ற சிறுவன் **நசிகேதன்** வாழ்ந்த பூமியிது.

நித்ய சிரஞ்ஜீவியான மரணத்தை வென்ற **மார்க்கண்டேயன்** பிறந்த நாடு நம் நாடு.

ஔவையார், கார்கி, மீரா, ஆண்டாள், காரைக் காலம்மையார், அக்கமாதேவி போன்ற எண்ணற்ற மகளிர் ஆத்மஞானம் அடைந்த அமரதேசம் நம் பாரத தேசம்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் நடமாடிய பூமி இது.

திருவள்ளுவரும், நாமதேவரும், துக்காராமும், ஞானேஶ்வரரும், மாணிக்கவாசகரும், சைதன்யரும், துளஸிதாஸரும், கம்பரும், ஸ்ரீதியாகையரும் பக்தி ஸாதனம் செய்து புண்ணியம் பெற்ற நாடு நம் நாடு.

உலகில் வேறெங்கும் தோன்றாத வேதங்கள், உபநிஷதங்கள், ஸ்ரீமத் பகவத்கீதை, ப்ரம்ம ஸூத்திரம், தேவாரம், திருவாசகம், திவ்யப்ரபந்தம், திருமந்திரம் என பல கோடி புனித கிரந்தங்கள்(நூல்கள்) பிறந்த பூமி நம் பாரதமே.

ஞானமானது வேறு எந்த நாட்டுக்கும் செல்லுமுன் இந்தப் புராதன பூமியையே தனது வீடாகக் கொண்டிருந்தது.

உலகில் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்துள்ள முனிவர்களிலே, மிகச் சிறந்தவர்களின் திருவடிகள் நடமாடிய நாடு நம் நாடு.

இறைவனே பலமுறை மானிடனாய் அவதரித்து அருள் பாலித்த அமரபாரதம் தான் நம் பாரததேசம்.

தர்மம் எங்கு தோன்றியதோ, எங்கு ஆராயப்படுகிறதோ, எங்கு மதிக்கப்படுகிறதோ அங்கு தான் கடவுள் அவதாரம் செய்கிறான்.

இந்த நாட்டில் பிறந்தவர்களாகிய நாம் உண்மையிலேயே மற்றவர்களைக் காட்டிலும் பாக்யவான்களே என்பதில் ஸந்தேகமேயில்லை.

ஆடும் கரியும் அணிலும் குரங்கும் அன்பு
தேடும் சிலம்பியோடு சிற்றெறும்பும் நீடுகின்ற
பாம்பும் சிவார்ச்சனைதான் பண்ணியதேன்றால்
பூஜை ஓம்புதற்கு யார்தாம் உவவாதார்?

- மூன்றாம் திருமறை, நெஞ்சறிவுறுத்தல், திருவருட்பா திருவருட் பிரகாச வள்ளலார்.

நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடம் நம்பிக்கை, நம்பிக்கை, இறைவனிடம் நம்பிக்கை - இதுவே மகோன்னதத்தின் ரகசியம்.

- ஸ்வாமி விவேகானந்தர்

வழிபட்ட விலங்குகள்		வழிபட்ட ஸ்தலம்
1]	ஆடும், ஆனையும்	திருவாடானை
2]	அணிலும், குரங்கும்	குரங்கணில்முட்டம்.
3]	சிலந்தியும், ஆனையும்	திருவானைக்காவல் ஸ்ரீகாளஹஸ்தி
4]	எறும்பு	திருவெறும்பூர்
5]	பாம்பு	திருப்பாம்புரம்
6]	சிங்கம்	திருநல்லூர்
7]	புலி	பெரும்புலியூர், சிறுபுலியூர் பெரும்பற்றப்புலியூர் ஓமாம்புலியூர், திருப்பாதிரிப்புலியூர்.
8]	பசு	திருவாவடுதுறை, பட்டீச்சுரம், திருவாமாத்தூர், திரு ஆவூர்.
9]	பன்றி	திருச்சிவபுரம்
10]	கழுகு	திருக்கழுக்குன்றம், புள்ளிருக்குவேளூர்
11]	ஆமை	திருமணஞ்சேரி
12]	தவளை	ஊற்றுத்தூர் [வைப்புத்தலம்]

13]	நண்டு	திருந்துதேவன்குடி
14]	மீன்	திருச்சேலூர்
15]	வண்டு	திருவண்டுதுறை
16]	ஈ	திருச்சிற்றேமம், ஈங்கோய்மலை
17]	மயில்	திருமயிலாடுதுறை, திருமயிலை, மயிலம், மயிலாடி, மயிலூர் [செந்துறை] மயூராசலம்,
18]	குருவி	மதுரை, திருவலிவலம்,

பட்டியல் முற்றுப்பெறவில்லை. விரிவு அஞ்சி இத்துடன் நிறுத்திக்கொள்கிறோம். பயில்வோர்கள் தங்களுக்குத் தெரிந்த விலங்குகள், பறவைகள், ரிஷிகள், சித்தர்கள், தேவர்கள், அசுரர்கள் வழிபட்ட ஸ்தலங்களைத் தாமும் தெரிந்து கொண்டு மற்ற நம் ஸஹோதர ஸஹோதரிகளுக்கும் சொல்லவும். பட்டியல் தொகுப்பை தலைமைச் செயலகத்துக்கு அனுப்பவும்.

நாம் முன்னேற வேண்டுமானால் முதலில் நமக்கு நம்மிடம் நம்பிக்கை வேண்டும்; பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன், கடவுளிடமும் ஒருபோதும் நம்பிக்கை வைக்க முடியாது.

- ஸ்வாமி விவேகானந்தர்

2.எங்கள் தந்தையர் நாடு
(பிதுரார்ஜிதம்)

புரட்சித் துறவி ஸ்ரீராமானுஜர்

ஸ்ரீமத் ராமானுஜாசாரியார் சென்னைக்குத் தென்மேற்கே சுமார் 30 கி.மீ தூரத்திலிருக்கும் ஸ்ரீபெரும்புதூர் என்ற ஊரில் அவதரித்தார். காந்திமதி / ஆஸுரி கேசவ தீக்ஷிதர் தம்பதிகளுக்கு ஸ்ரீ ஆதிசேஷன் அம்சமாக இன்றைக்குச் சற்றேறக் குறைய 1000 ஆண்டுகளுக்கு முன் அவதரித்தார்.

அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் மடாதிபதியாயிருந்த ஸ்ரீ ஆளவந்தாருக்கு இவர் தாய் வழியில் நெருங்கின உறவினர்.

இவருக்குத் தம்பி முறையில் கோவிந்த பட்டர் என்றொருவர் இருந்தார். இவர்கள் இருவரும் காஞ்சிபுரம் சென்று யாதவ ப்ரகாசர் என்ற அத்வைத ஆசார்யரிடம் கல்வி கற்றனர். கல்வி கற்று வரும் நாளில் குரு யாதவ ப்ரகாசருக்கும் சிஷ்யர் ராமானுஜருக்கும் மனஸ்தாபம் ஏற்படவே, கல்வி தடைபட, பிரிய நேரிட்டது.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் தமது காலம் சீக்கிரம் முடிந்து விடுமென்று மதித்துத் தம் சிஷ்யர்களுள் பெரியவரான பெரிய நம்பி என்பவரைக் காஞ்சிபுரம் அனுப்பி எம்முயற்சி செய்தாவது ஸ்ரீராமானுஜரை ஸ்ரீரங்கம் அழைத்து வரப் பணித்தார்.

பெரிய நம்பி திரும்பி வருவதற்குள் ஸ்ரீ ஆளவந்தார் இறையடி சேர்ந்தார். ஆனால் ஸ்ரீ ஆளவந்தாரின் வலதுகை மூன்று விரல்கள் மடிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அதன் காரணத்தை விசாரித்த காலத்தில் ஆளவந்தாருக்கு மூன்று குறைகள் இருந்தனவென்று தெரியவந்தது. அவை முறையே:

1. 'ப்ரஹ்ம' ஸூத்திரத்திற்கு எளிய நடையில் விளக்க உரை ஒன்று செய்வது.

2. 'பராசரர்' என்ற பெயரைத் தகுந்தவருக்கு வைப்பது.

3. திருவாய்மொழிக்கு எளிய நடையில் விளக்க உரை செய்வது என்பனவாகும்.

அக்குறையைத் தீர்த்து விடுவதாக ராமானுஜர் வாக்களித்ததும் மடங்கிய விரல்கள் நிமிர்ந்தன.

ராமானுஜரின் வேண்டுகோளின்மேல் மதுராந்தகம் ஸ்ரீராமர் சந்நிதியில் பெரியநம்பி அவருக்கு உபதேசம் செய்தார். ஸ்ரீராமானுஜர் இல்லறத்தில் இருந்தபோதும், ஸந்யாஸம் வாங்கிக் கொண்டார்.

ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கம் வந்ததும் தமக்கு ஏற்பட்ட ஸ்தானத்துக்கு ஏற்ப அதிகாரங்களை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினார். பெரியநம்பியிடம் இவர் உபதேசம் பெற்றிருந்தும், வேறு குருக்களை நாடி மற்றைய சாஸ்திர விஷயங்களை அறிந்து கொள்ளும்படி நேரிட்டது.

மந்திரார்த்தங்களைத் தெரிந்து கொள்ள இவர் வெகுநாள் திருக்கோஷ்டியூர் நம்பியிடம் நடந்து பார்த்தார். பிறகு

18ஆவது முறை நம்பி கருணை கூர்ந்து ஸ்ரீ பகவத் கீதாஸார ஸ்லோகத்தை வெகுவிரிவாக உபதேசித்து அதை அதிகாரிகள் அல்லாதவர்களிடம் சொல்லிவிடக் கூடாது என்று நிபந்தனை விதித்தார்.

மந்திரார்த்தத்தையும் அதன் மூலமாக மனிதன் எளிதில் சீர்திருந்தி மோக்ஷம் அடையும் வழியையும் உணர்ந்ததும், உலகில் வீணே வழிதப்பி மதிமயங்கும் மக்களுக்கு அவற்றை வெளியிட்டு அவர்களைச் சிறப்படையும்படிச் செய்யவேண்டும் என்ற அடங்கா ஆவல் ஸ்ரீராமாநுஜருக்கு உண்டாகிவிட்டது.

ஸ்ரீராமாநுஜருக்கு குரு சொன்னது அந்தச் சமயத்தில் முற்றும் மறந்து போய்விட கருணை மிகுதியால் அருகேயிருந்த கோபுரத்தின் மீதேறிக் கொண்டு உரத்த குரலில் மக்களுக்கு கீதார்த்த ரகஸியத்தை வெளியிட்டார். அதை அறிந்த குரு இவரை அழைத்து விசாரிக்க, ராமாநுஜர், ''தான் செய்தது பிழைதான்; தகுந்த தண்டனையைப் பெறச் சித்தமாய் இருக்கிறேன்'' என்றார்.

குரு, ''உனக்கு மீளா நரகம் இனிமேல் வரும்; இங்கே ஒரு தண்டனையும் இல்லை'' என்றார்.

ஸ்ரீராமாநுஜரும், 'ஜனங்கள் துக்கம் நீங்கி விடுதலை பெறுவது நிச்சயம் என்றால், அவ்வாறு செய்த எனக்கு நரகம் வந்தாலும் வரட்டும் என்று மிகுந்த கருணையுடன் சொன்னார். சிஷ்யனது ஆழ்ந்த கருணையைக் கண்டு குரு மிகவும் மகிழ்ந்தார்.

தமது சிஷ்யனான கூரத்தாழ்வாரது உதவியால்

ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம் செய்தார். இவர் விளக்க உரைக்கு **ஸ்ரீபாஷ்யம்** என்றே பெயர் கிடைத்தது. கூரத்தாழ்வாருக்கு இறையருளால் ஒரு குழந்தை பிறக்க அப்பிள்ளைக்கு **பராசரபட்டர்** என்று பெயரிட்டார். தம்முடன் இருந்த பிள்ளான் என்பாரிடம் திருவாய்மொழி விஷயமாக உள்ள ஞானத்தின் நுட்பங்களைக் கண்டு அவர் மூலமாகத் திருவாய்மொழிக்கு ஒரு விளக்க உரை ஏற்படுத்தினார். இப்படிச் செய்யவே ஆளவந்தாரின் குறைகள் மூன்றும் தீர்ந்தன.

ராமாநுஜர் மறைவதற்கு முன், இவர் விக்ரகங்கள் மூன்று செய்யப்பட்டு ஸ்ரீ ரங்கம், ஸ்ரீ பெரும்புதூர், ஸ்ரீ நாராயணபுரம் ஆகிய மூவிடங்களிலும் இவர் அனுமதியின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டன. இவர் 120ஆம் வயதில் ஸித்தியடைந்தார்.

தீண்டாமையை வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் களைய யாவரும் சிந்தித்துக் கூட பார்த்திராத நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை ஹரியின் ஜனங்களாக **'திருக்குலத்தார்'** என்று பெயரிட்டவர் இவரே. அதனால் தான் **மகாத்மா காந்தியடிகள்** தன் ஆன்மிக குருவாக **ஸ்ரீராமாநுஜரைக்** கொண்டார்.

ஜாதி பேதங்கள் ஒழிந்து ஹிந்து ஸமுதாயம் கட்டுப்பாடுடன் ஒருடலாக வாழ உடையவர் ஸ்ரீராமாநுஜரைப் ப்ரார்த்திப்போமாக!

அனைத்தையும் தன்னம்பிக்கை சாதிக்கும். என் வாழ்க்கையில் நானே அதை உணர்ந்திருக்கிறேன்.

- ஸ்வாமி விவேகானந்தர்

ஸ்ரீமத் ராமாநுஜாசாரியார் அளித்த விசிஷ்டாத்வைதம் சுருக்கம்:

1. உலகில் மூன்று பொருட்கள் உண்டு. அவை 1. சித் (ஜீவாத்மா), 2. அசித்து (உயிரற்றவைகள்) 3. இரண்டிற்குமான ஆதாரம் விஷ்ணு.


2. அவைகளில் சித்துள்ளும் அசித்துள்ளும் பரமாத்மா பரவி நிற்க, அவைகள் பரம்பொருளுக்கு உடல்போல ஆகின்றன.

3. அசித்தோடு ஸம்பந்தப்பட்ட சித், அசுத்தமாக இருக்கிற அணுவாக இருக்கிறது. பரமாத்மா க்ருபையால் அசித் ஸம்பந்தம் நீங்கிவிட்டால் நெருப்புப் பொறி நெருப்புப் போல் இருப்பது போலவே பரமாத்மா போல ஆகி அவருடன் இருந்து ஸுகிக்கும். இதுவே முக்தி அல்லது மோக்ஷம்.

4. முக்தி அடைய அவரிடம் சரண்புக வேண்டும். அப்பொழுது தான் ஆத்மா சுத்தமாகி முக்தி கிடைக்கும்

'ஜாதி பேதங்கள் இல்லை என்றாகணும்:
ஹிந்து நாம் என்று உணரணும்:
பாரத நாடிது பார்தனில் உயரணும்:
பாரினில் பண்பினைப் பரப்பணும்'.

- அதே சிந்தனை



எம்பெருமானார் உடையவர் ஸ்ரீ ராமானுஜர்
ஆயிரமாவது ஆண்டு
ஜயந்தி விழாவில் ஹிந்து சக்தியை
ஒன்றிணைக்க உறுதி பூணுவோம்.

3. ஹிந்து ஞானக் களஞ்சியம்

(குருவாசகம்)

உலகத்தில் ஆராய்வதற்கென்று இருப்பவை மூன்றே என்று நம் முனிவர்கள் மொழிந்துள்ளனர். அவை முறையே உயிர் (ஜீவன்), உலகம் (ஜகம்), உடையவன் (ஜகந்நாதன்) ஆகும்.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்திலே இதனை மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்

மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன

ஆன்ற தொல்பதி ஆருயிர்த் தொகை

வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே

பதி (இறைவன்) பசு (உயிர்) பாசம் (படைப்பு) என சைவ சித்தாந்தம் இதனையே சொல்கிறது.

இறைவனையும், இறைவன் சிருஷ்டித்துள்ள படைப்பையும், படைப்பில் ஓர் அங்கமாக விளங்கும் ஜீவனையும் குறித்துச் சொல்ல வந்தவையே வேதங்கள்.

உண்மையான அறிவிற்கு வேதங்கள் வழிகாட்டுவதால் ஹிந்துமத ஆதார நூல்களாகிய இவை வித்யா ஸ்தானங்கள் (அறிவின் இருப்பிடம்) என்று அழைக்கப் படுகின்றன. இந்த அறிவை அடைவதற்குத் தகுந்த வாழ்க்கை முறையையும் வேதங்கள் வெளிப்படுத்து வதால் அவை 'தர்மப் ப்ரமாணங்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

ஸம்ப்ரதாயமாக, வேதங்களின் படிப்பு என்பது நான்கு வேதங்களுடன் பத்து சாஸ்திர நூல்களையும் சேர்த்துப் படிப்பதாகும். உபவேதங்கள் நான்கினையும் சேர்த்துப் பதினெட்டாகவும் கொள்வர்.

இந்தப் பதினான்கு வகை வைதிக சாஸ்திரங்களையும், உபவேதங்கள் நான்கினையும் சேர்த்து சித்திரை மாதப் பாடப்புத்தகத்தில் (பக்கம் 44/45) பட்டியலிட்டிருப் பதைப் படித்திருப்போம்.

ஒன்றை நாம் தெளிவாக மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். ''ஹிந்து மதம் என்பது ஸநாதந தர்மம், ஸநாதந தர்மமானது அழியாதது; அழிக்க முடியாதது; நித்யமானது; அமரத்வம் வாய்ந்தது.'' இறைவன் படைத்த இந்த அழகிய உலகில் வாழ்வாங்கு வாழ நம்மை நாம் அறிந்து கொள்ள வேண்டியது முதற் கடமையாகும். நம்மை நாம் அறிந்து கொள்வது என்பதுதான் இறைவனை அறிந்து கொள்ளுதலாகும்.

தன்னை அறியத் தனக்கோரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே

– (திருமந்திரம் – திருமூலர்)

நம்மை நாம் அறிந்து கொள்வதற்கும், அதன் மூலம் நாம் வாழும் உலகில் தெய்வீக வாழ்க்கை வாழ்வதற்கும், துணை நிற்பவைதான் வேதங்கள்.

''இறைவன் ஒருவன் இருக்கிறான்'' என்று ஹிந்து தர்மம் சொல்லவில்லை; மாறாக, **'இருப்பதெல்லாம்**

இறைவனே' என்பதுதான் வேதம் முரசறைந்து சொல்லும் வாசகம்.

'இருப்பதெல்லாம் இறைவனே' என்று சொல்வதற்குரிய ஞானம் தரும் பொக்கிஷமே வேதங்கள்.

வேதம் என்றால் என்ன?

வேத என்னும் சொல், **'அறிதல்'** என்ற பொருளுடைய **'வித்'** என்னும் ஸம்ஸ்க்ருத மூலச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

ஒரு மானிடருக்குக் கிடைக்கக் கூடிய குறிக்கோள்களையும் வழிவகைகளையும் அறிவிக்கும் பொருள் விளக்கத் தொகுப்பை வேதங்கள் குறிப்பிடுகின்றன.

வேதங்களின் இரண்டு பகுதிகள்

வேதங்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வேதங்களின் முதல் பகுதி, **'கர்ம காண்டம்'** என்று அறியப்படுகிறது. இந்தப் பகுதி **'கர்ம'** எனப்படும் செயல்களைப் பற்றிக் கூறுகிறது. குழந்தைப் பேறு, மழை போன்ற அறிந்த (த்ருஷ்ட) பலன்களைப் பெறுவதற்கான ஓர் உபாயமாகவும், ஸ்வர்க்கம் போன்ற அறிந்திராத (அதிருஷ்ட) பலன்களை அடைவதற்கான வழியாகவும் உள்ள கர்மங்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. எண்ணிக்கையில் அடங்காத மானிட குறிக்கோள்களுக்கு உபாயங்களைக் கர்ம காண்டம் அளிக்கிறது.

வேதங்களின் இரண்டாவது பகுதி **ஞான காண்டம்** அல்லது **வேதாந்தம்** என்று அறியப்படுகிறது. இந்தப் பகுதி உபநிஷத்துகளைக் கொண்டதாக இருக்கிறது. ஞானகாண்டம் வெவ்வேறு விதமான உபாயங்களையும், நோக்கங்களையும் பற்றிக் கூறுவதில்லை. இது வாழ்க்கையின் ஒரு முக்கியமான குறிக்கோளைப் பற்றியும், அந்தக் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கான வழிமுறையைப் பற்றியுமே விவாதிக்கிறது. (*வேதங்கள் கர்ம காண்டம், உபாஸனா காண்டம், ஞான காண்டம்* என மூன்று பகுதிகளாகவும் பிரித்துச் சொல்வதுண்டு.)

வேதங்களின் மையக் கருத்துப்படி '**மோக்ஷம்**' என்று அழைக்கப்படும் இந்த குறிக்கோள், ஒவ்வொரு மானிடருக்கும், தன்னுடைய வாழ்வின் முடிவான குறிக்கோளாகப் பார்க்கப்படுகிறது.

'மோக்ஷம்' என்றால் என்ன?

மோக்ஷம் என்பது நிறைவின்மை அல்லது வரையறைக்குட்பட்டதாக இருக்கும் உணர்விலிருந்து விடுபடுதல் ஆகும்.

இந்தக் குறிக்கோளானது மற்ற குறிக்கோள்களைப் போல் இல்லை. ஏனெனில் இது ஏற்கெனவே கிட்டிய குறிக்கோளாகக் கருதப்படுகிறது. '**நாம் அனைவருமே இயற்கையிலேயே ஸ்வதந்தரமானவர்கள் தாம். பிறக்கின்ற ஒவ்வொருவரும் உண்மையில் விடுபட்டவர்தான்; விடுபடுவதற்காக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை**' என்று ஞானகாண்டம்

தெரியப்படுத்துகிறது. இந்த உண்மைக்கு அறிவு தேவை; செயல் தேவை இல்லை.

வேதங்களின் இரண்டாவது பகுதி (ஞான காண்டம்) மெய்ம்மையின் இயல்பையும் ஒருவருக்குத் தன்னைப் பற்றிய உண்மையையும் வெளிப்படுத்தும் அறிவின் ஸாதனமாகும்.

ஒவ்வொரு வேதத்திற்கும் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை முறையே :

1. ஸம்ஹிதா (ஸம்ஹிதை)

2. ப்ராஹ்மணம் (ப்ராம்மணம்)

3. ஆரண்யகம்

4. உபநிஷதம் என்பனவாம்.

இதில் ஸம்ஹிதையும் ப்ராஹ்மணமும் கர்ம காண்டமாகும்.

ஆரண்யகம் உபாஸனா காண்டமாகும்.


உபநிஷதம் ஞான காண்டமாகும்.


லட்சியத்தில் உறுதியும், தூய்மையான நோக்கமும் இருந்தால் வெற்றி நிச்சயம். இந்த இரண்டையும் பெற்றவர்கள் சிலராகவே இருந்தாலும் அவர்கள் எல்லாத் தடைகளையும் கடந்து நிச்சயமாக முன்னேறுவார்கள்.

- ஸ்வாமி விவேகானந்தர்

ௐ

வேதம் (அநாதி, கலியுகத்தில் நம், நன்மைக்காகத் தொகுத்தவர் - வ்யாஸர்




வேதம்
வேதாங்கங்கள் (ஷடங்கங்கள்)
உபவேதங்கள்
உபாங்கங்கள்
1. ஆயுர்வேதம் - ரிக்
2. தனுர்வேதம் - யஜூர்
3. காந்தர்வ வேதம் - ஸாமம்
4. அர்த்த வேதம் - அதர்வ
மீமாம்ஸா
பூர்வ மீமாம்ஸா
உத்தர மீமாம்ஸா
நியாயம்
புராணம்
தர்ம சாஸ்திரம்
இதிஹாஸங்கள்
ராமாயணம்
மஹா பாரதம் ஸ்ரீமத் பகவத் கீதை
புராணங்கள்
மஹா புராணங்கள் (18)
உப புராணங்கள் (18)
1 சிக்ஷா (ஒலி அல்லது எழுத்து இலக்கணம்)
2 வ்யாகரணம் (மொழி இலக்கணம்)
3 சந்தஸ் (யாப்பு இலக்கணம்)
4 நிருக்தம் (சொல் இலக்கணம்)
5 ஜ்யோதிஷம் (வானவியல்/ கோள் இலக்கணம்)
6 கல்பம் (சடங்கு இலக்கணம்)

4. ஹிந்து கடவுளர்கள்

(ஈய்வர தத்துவம்)

தாமரை : அண்ணா! சென்ற கலந்துரையாடலில் பஞ்சபூதங்களும் அறிவில்லாத பொருள் களே என்றீர்கள். அப்படியானா...ல்

வித்யா : என்ன அப்படி யா....னா...ல் என்று இழுத்துக் கொண்டு போகிறாய்?

அண்ணா : ஏன் அதற்குப் பிறகு என்ன சிந்தித்தோம் என்பது மறந்துவிட்டதா?

விவேக் : 'பஞ்ச பூதங்களும் அறிவில்லாத பொருள்களே. அறிவில்லாத பொருள்கள் தாமே இயங்கவும் ஒரு செயலைச் செய்யவும் இயலாது. ஆதலால் இவற்றைச் செய்வதற்கு அறிவும் ஸ்வதந்த்ரமும் உடைய ஒருவன் இருக்க வேண்டும்' என்றீர்கள் அண்ணா!

அண்ணா : சபாஷ்! உன் பெயருக்கு ஏற்றாற் போல் பேசுகிறாய்.

முருகன் : என் பெயருக்கு...

அண்ணா : இங்கு எல்லோருமே புத்திசாலிகள் தான். மேலும் சிந்திப்போம்.

தாமரை : அண்ணா! எனக்கு ஒரு சந்தேகம்.

வித்யா : ஒன்றுதானா!

தாமரை : இப்பொழுது ஒரு சந்தேகம்.

அண்ணா : சரி, சரி. தாமரை கேள் உன் சந்தேகத்தை.

தாமரை : நான் 'அம்புலிமாமா' புத்தகத்தில் படித்த கதை அண்ணா! ஒரு சிறுவன் ஆலமரத்தின் பக்கம் விளையாடப் போனான்; அது ஒரு பெரிய ஆலமரம் தான். என்ன ஆச்சரியம்! ஆலமரக் கிளைகளில் ஆயிரக்கணக்கான சிறு பழங்கள் பழுத்திருந்தன. இதென்ன விந்தை! இத்தனை பெரிய மரத்திற்கு இத்தனை சிறிய பழம்? இம்மரத்தை ஒரு கடவுள் உண்டாக்கியிருந்தால் அக்கடவுளின் அறியாமையை என்ன என்று கூறுவது? மரஞ்செடிகளில் தாரதம்மியம் வேண்டாமா? ஒரு பரங்கிக் கொடியில் பெரிய காய். ஆனால் இப்பெரிய மரத்திற்குச் சிறிய பழம் ஏன்? என்று எண்ணிக் கொண்டே படுத்து விட்டான்.

முருகன் : பிறகு என்னவாயிற்று?

தாமரை : திடீரென்று காற்று வீசிற்று. நல்ல உறக்கத்திலிருந்த அவன் அடிவயிற்றின் மீது ஒரு சிறிய ஆலமரப் பழம் விழுந்தது. உடனே சுரீர் என்று வலி ஏற்பட்டது.

வித்யா : அடடே! நல்ல வேளை பெரிய பழமாக இருந்திருந்தால்....

விவேக் : பரங்கிக் காய் போன்ற பழம் இல்லாமல்,

சுண்டைக்காய் அளவு பழம் இருந்ததால் பிழைத்தான்.

தாமரை : கதையும் அப்படித்தான் முடிகிறது. முன்னெச்சரிக்கையுடன் தான் உலக முதல்வன் சிருஷ்டி செய்திருக்கிறான்.

வித்யா : அதிலென்ன சந்தேகம்!

அண்ணா : நம்மையும், நாம் வாழும் பூமியையும், அதில் எண்ணற்ற உயிரினங்களையும், மற்ற கோள்களையும், எண்ணில் அடங்கா நக்ஷத்ரங்களையும் ஆக்கியவன் ஒருவன் இருக்கவேண்டும் என்பது உறுதி யாகிறதா?

நால்வரும் சேர்ந்து : ஆமாம்! ஆமாம்!

அண்ணா : தாமரை சொன்ன 'அம்புலிமாமா' கதையிலிருந்து ஆலமரத்திற்குச் சிறு பழமும் பரங்கிச் செடிக்குப் பெரிய காயும் இறைவன் அறிந்தே வைத்துள்ளான் என்பது தெரிகிறது. சரிதானே!

நால்வரும் சேர்ந்து : ஆமாம்! ஆமாம்!

அண்ணா : அப்படியானால் நம்மையும் நம் ப்ரபஞ்சத்தையும் படைத்த உலக முதல்வன் ஒருவன் உண்டு. **அவனன்றி ஓரணுவும் அசையாது** என்பது உண்மைதானே.

நால்வரும் சேர்ந்து : அதிலென்ன சந்தேகம்!

முருகன் : அண்ணா! உலகை நம் கண்ணால் பார்க்கிறோம். அப்படி ஏன் முதல்வனை நம்மால் பார்க்க முடியவில்லை.

அண்ணா : காற்றை நீ பார்க்க முடிகிறதா?

முருகன் : பார்க்க முடியவில்லை. ஆனால் காற்று வீசுவதை உணர்கிறேன்.

அண்ணா : சரியாகச் சொன்னாய்? பஞ்ச பூதங்களால் இந்த உலகம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு அம்சமான நம் உடலும் பஞ்சபூதங்களால் தான் ஆக்கப் பட்டிருக்கிறது.

வித்யா : அண்ணா! அப்படியானால் நம் உடம்பில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஐந்தும் இருக்கின்றனவா?

அண்ணா : ஆம் வித்யா! அதிலென்ன ஐயப்பாடு? அறிவைப் பெறுவதற்கும் செயலைச் செய்வதற்கும் கருவிகளையும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தாமரை : இரண்டு விதமாக கருவிகள் நம் உடம்பில் இருக்கின்றனவா?

அண்ணா : ஆமாம்!

விவேக் : அவை என்ன?

அண்ணா : தொழிற்கருவிகளும், அறி கருவிகளும்

தாமரை : அதென்ன கருவி, பொறி

அண்ணா : கருவி என்றாலும் பொறி என்றாலும் ஒன்றுதான். இந்த்ரியம் என்றும் சொல்கிறோம்.

முருகன் : என்னென்ன கருவிகள், அண்ணா?

அண்ணா : கர்மேந்த்ரியங்கள் ஞானேந்த்ரியங்கள் என இருவகையான கருவிகளை இறைவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். தமிழிலே தொழிற்கருவிகள், அறிகருவிகள் என்று சொல்கிறோம்.

வித்யா : விவரமாகச் சொல்லுங்கள் அண்ணா!

அண்ணா : தொழிற் கருவிகள் 5. அவை முறையே:

கருவிகள்		தொழில்
வாக்கு	(வாய்)	பேசுதல்
பாணி	(கை)	கொடுத்தல், வாங்குதல்
பாதம்	(கால்)	நடத்தல்
பாயு	(எருவாய்)	விடுத்தல்
உபஸ்தம்	(கருவாய்)	ஆனந்தித்தல் (பேறு உண்டாக)

அறிகருவிகள் 5. அவை முறையே

கருவிகள்	அறிவு
மெய்	ஸ்பர்சம் (தொடு உணர்வு)
வாய்(நாக்கு)	ரஸம் (சுவை உணர்வு)
கண்	ரூபம் (உருவம்) (ஒளி உணர்வு)
மூக்கு	கந்தம் (நாற்றம்) (வாஸனை உணர்வு)
செவி	சப்தம் (ஒலி உணர்வு)

இந்தப் பத்தும்தான் இறைவன் நமக்கு வழங்கிய கருவிகள்.

தாமரை : அண்ணா! எத்தனை விஷயங்கள் நம் ஹிந்து தர்மத்திலே சொல்லி யிருக்கிறார்கள். இதையெல்லாம் பள்ளிக்கூடத்திலே பாடமாக ஏன் வைப்பதில்லை?

அண்ணா : ஓ அதுவா! நம்நாடு ஹிந்து மதம் சாராமல் மற்ற மதங்களுக்கு சலுகைகள் காட்டும் மதச்சார்பின்மை நாடு.

விவேக் : இதுவா மதச்சார்பின்மை? எந்த மதங்களையும் சார்ந்து இல்லாமல் எல்லா மதங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டுவது அல்லவோ, அரசின் கடமை. அதற்குப் பெயர்தானே மதச்சார்பின்மை.

அண்ணா : சரியாகத் தான் சொல்கிறாய்! இருந்தாலும் நம் கலந்துரையாடலுக்கு இப்போது இது வேண்டாம். பிறகு ஒருநாள் பார்க்கலாம். அடுத்தமாதம் சந்திப்போம்.

நால்வரும் சேர்ந்து : சரி அண்ணா!

இல்லை, இல்லை என்று சொல்லி, நாடே சீரழிந்து விட்டது... என்ன சங்கடம், பாருங்கள்! ஒவ்வோர் ஆன்மாவிலும் எல்லையற்ற ஆற்றல் உள்ளது.

ஓ துரதிருஷ்டசாலிகளே, 'நாஸ்தி, நாஸ்தி' என்று சொல்லிக் கொண்டு பூனைகளாகவும் நாய்களாகவும் மாறி அலையப் போகிறீர்களா? 'இல்லை, இல்லை' - என்ன இல்லை? யாருக்கு இல்லை?

'சிவோஹம், சிவோஹம் - நானே சிவன், நானே சிவன்!' உன்னிடம் எல்லா ஆற்றலும் உள்ளதே! வீரனே, உனது ஆற்றல் நிறைந்த இயல்பைக் கூவி அழைத்துக்கொள். இந்த மூவுலகும் உன் காலடியில் கிடக்கும். ஆன்மா மட்டுமே சிறந்து நிற்பது. ஜடப்பொருள் அல்ல.

- ஸ்வாமி விவேகானந்தர்

5. ஹிந்து வாழ்வியல்
(ஜீவன த்ருஷ்டி)

உடையின் மீது நம் கண்ணோட்டம்

'ஆள் பாதி, ஆடை பாதி' என்பார்கள். ஆடை மானத்தை மறைப்பதோடு மட்டுமல்லாமல் மரியாதைக் குரியதாகவும் மனத்தை உயர்த்துவதற்குத் துணை புரிவதாகவும் இருக்கவேண்டும். பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே நம் முன்னோர்கள் உடுத்தும் உடை தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தும் வண்ணம் இருக்கவேண்டுமென்று சிந்தித்தனர். அவ்வண்ணமே உடை உடுத்தினர்.

உடுத்தும் உடையில் ஹிந்துத் தன்மை வெளிப்படும் வண்ணம் இருக்கவேண்டுமா? ஏன்? எப்படி?

நம் பாரத நாட்டில் தட்ப வெப்பச் சூழ்நிலைகளை மனதில் கொண்டு பண்பாட்டுக்கு ஏற்றதாகவும் அதே ஸமயம் நாகரீகத்தின் உச்சத்தில் இருக்கும்படியாகவும் உடைகளை அமைத்துக் கொடுத்தனர். ஆண் தன்மைக்கு ஏற்பவும் பெண் தன்மைக்கு ஏற்பவும் ஆடைகளை வடிவமைத்தனர்.

உலகில் அன்றும் இன்றும் உழவுத் தொழிலிலும் நெசவுத் தொழிலிலும் முதன்மை பெற்று நிற்பவர்கள் பாரதீயர்களே.

நம் சமயாசாரங்களுக்கு ஏற்ப வேட்டியும் புடவையும் அமைந்தன. மாணவப் பருவத்திற்கு (ப்ரம்மசாரிகள்)

ஏற்ப முழங்கால் அளவு வரை வேட்டி உடுத்துதலும், இல்லறத்தார்க்கு (க்ருஹஸ்தாச்ரமம்) ஏற்ப கச்சமும் (பஞ்ச கச்சம்) மார்பை மூடும்படியான அங்கவஸ்திரமும் (மேலாடையும்) அணிந்தனர்.

பெண்ணின் தன்மைக்கேற்ப பாவாடை சட்டையும், வயது வந்தவுடன் தாவணி மேலாடையும் திருமணம் ஆன பின்பு புடவையும் (புடவை என்றால் பக்கங்களை மறைப்பது என்று பொருள் சொல்வர்) அமைத்திருக்கின்றனர்.

ஆண்களுக்கு கச்சம் போல பெண்களுக்கும் கொசுவம் வைத்து புடவை உடுத்தும் பழக்கம் ஏற்படுத்தினர். நம் பாரத தேசத்தின் பல்வேறு ப்ரதேச வழக்கத்தில் சிற்சில மாறுபாடுகள் இருந்தாலும் மங்கையர்களைத் தாயாகப் பார்க்கும் வகையிலே உடைகள் மங்களகரமாக இருக்கின்றன.

மேலை நாட்டு நாகரீகத்தின் தாக்கத்தாலும், மேலை நாட்டினரை குரங்கு போல பின்பற்றும் ஒரு மூடப் பழக்கத்தாலும் (Aping the west) பெண்களும் ஆண்களோடு ஸரிநிகர் ஸமானமாக இருக்கவேண்டும் என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு உடுத்தும் உடைகளில் ஆண்களைப் போலவே பெண்களும் இருப்பது வருந்தத்தக்கதாக உள்ளது. 'பெண்மை' என்கிற மென்மைத் தன்மைதான் பெண்மைக்கே இலக்கணம். அது இந்த உடை மாற்றத்தால் முழுவதுமாக அழிக்கப்பட்டு ஆணாகவும் அல்லாமல் பெண்மைத் தன்மையையும் இழந்து நிற்பதையும் பார்க்கிறோம்.

உடைகள் உன் பெருமையைப் பறைசாற்ற வேண்டும்.

மொகலாயர் படையெடுப்பில் நம் மாதரசிகள் பெண்மையைப் பாதுகாத்துக் கொள்ள ஏற்பட்டதுதான் ‘சுடிதார்’ எனும் வடிவமைப்பாகும். அதில் தவறேதுமில்லை. ஆனால் ஆண்களைப் போல ஜீன்ஸ் பேண்ட்டும், அரைக்கைச் சட்டை அல்லது பனியனும் அணிந்து மேலாடையும் (துப்பட்டா) இல்லாமல் செல்வது நாகரீகமும் அல்ல; பண்பாட்டிற்கும் கேடு என்பதை உணரவேண்டும்.

பெண்களைப் போகப் பொருளாகப் பார்ப்பதற்கு ஆடையும் ஒரு விதத்தில் காரணமாக அமைந்து விடுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

அந்நிய நாட்டுப் பெயர்கள், அந்நியத் தலைவர்கள், தலைகுனிவைத் தரும் வாசகங்கள் கொண்ட ஆடைகளை உடுத்துகின்ற வழக்கம் மேலோங்கியுள்ளது. பொதுவாகவே பெயர்களோ, படங்களோ, வாசகங்களோ கொண்ட உடைகள் உடுத்துவது நம் ஹிந்து வழக்கமில்லை. மதரீதியாகவும் கடவுளர்கள், கடவுள் அருள் பெற்ற அருளாளர்கள் படங்களைக் கூட உடைகளில் பதித்து அணிதல் நம் வழக்கமன்று.

பருத்தி ஆடைகளை அணிவதும், கைத்தறி ஆடைகளை அணிவதும் நம் ஸ்வதேசித் தன்மைக்கு மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்தது.

தொழில் வளர்ச்சியின் காரணமாக உடைகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை யாரும் குறை கூறவில்லை.

'தொழிலுக்கேற்ற ஆடை' என்பதை வலியுறுத்தியவர்கள் தான் நம் முன்னோர்கள்.

வெளிநாட்டுக்காரன் ஒருவன் நம் நாட்டு போர் வீரர்களைப் பார்த்துக் கேலி செய்தானாம் : ''நீங்கள் வேட்டி கட்டிக்கொண்டு எப்படி போர் செய்வீர்கள்?'' என்று. அதற்கு நம்மவன் அளித்த பதில் தான் முக்கியத்துவம் வாய்ந்தது.

''நாங்கள் என்றும் ஸமாதானத்தையே விரும்புபவர்கள். பாரதம் எந்த நாட்டின் மீதும் வலியப் போய் சண்டை இழுத்ததாக வரலாறு கிடையாது; போர் தொடுத்த நாட்டின் மக்களையும், அவர்கள் பண்பாட்டையும் அழித்தது கிடையாது. போர் என்று வந்தாலோ வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் குதித்து வெற்றி காண்போமடா!'' என்றானாம்.

நல்ல மெத்தப் படித்த குடும்பத்தினர்தான் உடைகள் விஷயத்தில் தாங்களும் சரி, தங்கள் குழந்தைகளுக்கும் சரி பண்பாட்டை வெளிப்படுத்தும் படியாக அறிவுறுத்துவதில்லை. உடைக்கு ஏற்ற வண்ணம் கூந்தலும், அலங்காரங்களும் அமைந்து விடுகின்றன.

அழகு ஸாதனப் பொருட்கள் விற்பனை மூலம் மட்டுமே பாரதத்தின் பொருளாதாரம் அந்நிய நாட்டிற்குப் போய்க்கொண்டிருக்கின்றது. என்பதுமட்டுமல்ல; அதிகமான அளவில் அழகு ஸாதன ஒப்பனைப் பொருட்களினால் ஆரோக்யம் கெடுகிறது. குடும்பத்தின் பொருளாதாரம் சரிகிறது; குடும்பப் பண்பாடு சீரழிகிறது என்பது கண் கூடு.

மிஸ் இந்தியா ('Miss India') மூலம் பாரதத்தையே இழந்தோம். மனித வாழ்க்கையின் நிம்மதியையும் இழந்து கொண்டிருக்கிறோம்.

மஞ்சளும், மருதாணியும், மஞ்சள் குங்குமமும், சிகைக்காயும், தேங்காய் எண்ணெயும், நல்லெண்ணெயும் இருந்த இடத்தில் கண்ட கண்ட கிரீம்களும், ஷாம்பூக்களும் வந்து குடும்பத்தின் முகத்தையும், தேசத்தின் முகத்தையுமே விகாரமாக்கி விட்டன என்பதுதான் உண்மை. உடலும் உள்ளமும் ஒருங்கே இந்த ரசாயனக் கலவைகளால் சீரழிந்து வருகின்றன.

மானம் மறைப்பதும், வெகுமானம் தருவதுமான பண்பாட்டு விஷயங்களில் உடையும் முக்கிய பங்கை வகிக்கின்றன என்பதை உணர்வோமாக!

எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால், பலவீனர்கள் ஆவீர்கள்; வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள்.

தோல்வியின் பயத்தால் சண்டையை விட்டுப் பின்னால் ஓடுவேனா என்ன? தோல்வி என்பதும் வீரனுக்கு ஆபரணம் தானே! சண்டையிடாமல் தோல்வியை ஏற்றுக் கொள்வதா?

- ஸ்வாமி விவேகானந்தர்

6. ஹிந்து பண்பாட்டுப் பாரம்பரியம்

(மண் வாசனை)

உபவாஸம்

உபவாஸம் என்பது உண்ணாமல் இருக்கும் விரதமாகும்.

உண்மையில் 'உபவாஸம்' என்னும் சொல்லுக்கான பொருள் என்ன?

உப ஸமீபே யோ வாஸ: ஜீவாத்ம பரமாத்மநோ: |
உப வாஸ: ஸ விக்ஞேய: ந து காயஸ்ய ஸோஷணம் ||

பதவுரை :

ஜீவாத்ம பரமாத்மநோ:	-	ஜீவன் பரமாத்மனின்
உபஸமீபே	-	அண்மையில் (அருகில்)
ய :	-	எது
வாஸ:	-	உறைந்திருப்பது என்பது எதுவோ
ஸ:	-	அதுவே
உபவாஸ:	-	உண்ணாமல் இருப்பது; (என்று)
விக்ஞேய:	-	அறிந்து கொள்ளப்பட வேண்டும்

காயஸ்ய - உடலின்

ஶோஷணம் - மெலிந்து போகச் செய்தல்

ந து - இல்லை

பொருள் :

ஜீவாத்மா பரமாத்மா பற்றிய சிந்தனைகளுடன், அவர் (இறைவன்) அருகில் இருப்பது தான் உபவாஸம் என்று ஒருவரால் அறிந்து கொள்ளப்பட வேண்டும். உண்ணாமல் இருந்து, உடலை மெலிந்து போகச் செய்தல் அல்ல.

இதன் உட்கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். சாப்பிடாமல் இருப்பது இறைவனுடன் ஒன்றுவதற்கு உதவும் வகையில் அமைய வேண்டும். தெய்வப் புலவர் வள்ளுவர் இதனை நயம்பட உரைத்துள்ளார்.

செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் [கேள்வி - அதிகாரம் - 412]

பொருள்:

(காதுகளுக்கு உணவாகிய கேள்வி அறிவு கிட்டாத ஸமயத்தில், வயிற்றுக்கும் சிறிதளவு உணவு அளிக்க வேண்டும்)

'சிறிது' என்ற சொற் ப்ரயோகம், 'ஈதல்' என்ற சொற் ப்ரயோகம் வள்ளுவர் பயன்படுத்தியிருப்பது ஊன்றி கவனிக்கத்தக்கது.

மிதமிஞ்சிய உணவு உட்கொள்ளுதலும், ஒன்றுமே வயிற்றுக்குப் போடாத நிலைமையும் நலமுடைத்ததல்ல

என்பதே இதன் ஸாரம். தினஸரி வயிற்றுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கிற நாம், உபவாஸத்தன்றாவது வயிறு ஸரி செய்து கொள்வதற்கும் அதன் வழி இறை சிந்தனை கொள்வதற்கும் என்றே முன்னோர்கள் செய்த ஏற்பாடு தான் உபவாஸம்.

உடலைச் சார்ந்த ஒழுக்கத்தைக் கொண்டு வருவதே உபவாஸத்தின் லட்சியம். கடுமையான முறையில் உடலை உண்ணாமல் வருத்துவது இவ்விரதத்தின் நோக்கமல்ல.

எங்கும் நிறைந்துள்ள இறை சக்தியை உணர்ந்து இறைவனிடம் நமக்குள்ள தொடர்பை உணரும் மனப்பக்குவத்தை அடைவதே உபவாஸத்தின் நோக்கம். அதற்கு நம் உணவுக் கட்டுப்பாடு உதவும் என்பதுதான் புரிந்து அனுஷ்டிக்க வேண்டிய ஒன்றாகும்.

உபவாஸ பலன்கள்:

(1) எதையும் பொறுத்துத் தாங்கிக் கொள்ளும் மனப்பான்மையான திதிக்ஷையை (பொறுமையை) ஒருவரிடம் வளர்க்க உதவுகிறது. (2) வாழ்க்கையில் ஒருவர் அனுபவிக்க நேரிடும் வசதி குறைவுகளை சமாளிப்பதை இந்த மனப்பான்மை எளிதாக்குகிறது. (3) ஒருவருடைய தேவைகளைக் கையாளுவதற்கு ஓரளவு மனதை அடக்கி ஆளக்கூடிய திறமையை ஒருவர் பெற்றிருப்பது அவசியம் என்பதை உபவாஸம் உணர்த்துகிறது. (4) ஒருவருடைய தேவைகள் நிறைவேறாமல் போகலாம்; இந்த பொறுத்துப் போகும் ஆற்றல் இல்லாமலிருந்தால், அவர் எளிதில்

மனமுடைந்து போகக் கூடும். அதைப் போக்குவதற்கு உபவாஸம் உதவி புரிகிறது. இப்படிப் பல நன்மைகளை உத்தேசித்தே உபவாஸம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

புராதன பாரதீய மருத்துவ சாஸ்த்ரமான ஆயுர் வேதத்தில், உடல் ஆரோக்கியத்திற்கு உண்ணாமை நன்மை பயக்கக் கூடியது என்று விவரிக்கப்பட்டுள்ளது.

''லங்க[3]னம் பரம ஔஷத[4]ம்''

''பட்டினி இருப்பது ஒரு நல்ல மருந்து'' என்று ஆயுர்வேதம் கூறுகிறது.

ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்கும் ஜீரண உறுப்புகளுக்கு உபவாஸம் ஓய்வைக் கொடுக்கிறது.

ப்ருஹதாரண்யக உபநிஷதத்தில் ஒருவருடைய மனப்பக்குவத்திற்கான பல்வேறு விரதங்களும், கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஒழுக்கங்களில் உண்ணாமலேயே இருப்பது என்ற அர்த்தமுள்ள **'அநசந'** என்பது ஒன்றாகும். 'அநசந' என்பதற்கு, இன்ப நுகர்ச்சிகளை விட்டு விலகி இருக்கவேண்டும் என்பதாகும்.

உணவு உட்கொள்ளும் விஷயத்தில் மிதமாக இருக்கவேண்டும்; வறுமையால் வாடும் மக்களின் துயரத்தையும் நாம் உணரவேண்டும். அதனாலன்றோ, நம் பாரதப் பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், ''ஸோம வார விரதம்' தான் இருந்து, நாட்டு மக்களையும் இருக்கச் சொன்னார். அப்படி இருந்தால்,

பாரத தேசத்தில் பட்டினித் துயரத்தை முழுவதுமாகத் தீர்ப்பேன் என்று உறுதியளித்தார். இப்படி ஆரோக்ய பொருளாதார, ஸமூக, ஆன்மிக என அனைத்து நிலைகளிலும் 'உபவாஸம்' ஒரு அருமருந்து என்பதை உணரவேண்டும். அதற்கென ஏற்பட்டவைதான் விரதங்கள்.

'முடியாது, என்னால் இயலாது' என்று மட்டும் சொல்லாதீர்கள். நீங்கள் எல்லையற்றவர்கள். காலமும் இடமும் கூட, உங்கள் இயல்புடன் ஒப்பிடும் போது ஒன்றுமே இல்லை. நீங்கள் எதையும் செய்ய முடியும், எல்லாம் வல்லவர்கள் நீங்கள்.

எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் எல்லாத் தூய்மையும் எல்லாச் சுதந்திரமும் என்னில் இருக்கிறது. அந்த அறிவை ஏன் என்னால் வெளிப்படுத்த முடியவில்லை? ஏனென்றால் அவை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நான் அதை நம்பினால் அவை வெளிப்பட்டே தீர வேண்டும்; வெளிப்படவே செய்யும்.

- ஸ்வாமி விவேகானந்தர்

7. ஹிந்து காலக் கணிதம்
(பஞ்சாங்கம்)

பஞ்சாங்கம் வாரங்கள் மாதங்கள் போன்ற நீண்ட காலப் பிரிவுகளையும் ஒரு நாளின் குறுகிய காலப் பிரிவுகளையும் கச்சிதமாக வரிசை முறைப்படி அமைத்துத் தருகிறது. ஒரு வருடத்தின் ஆரம்பத்தையும் கால அளவையும் ஒழுங்காக நிர்ணயித்துத் தருகிற நூல் தான் பஞ்சாங்கம்.

சித்திரை மாத **'ஹிந்து தர்ம ஞானம்'** புத்தகத்தில் ஸௌரமானம், சாந்த்ரமானம் பற்றி நாம் 'ஹிந்து பண்பாட்டுப் பாரம்பரியம்' என்ற ஆறாவது(6) தலைப்பில் பார்த்தோம். மேலும் அதைப்பற்றிய விரிவைக் காண்போம்.

பஞ்சாங்கம், **'ஸௌரமானம்'**, **'சாந்த்ரமானம்'** என்ற இரண்டு விதமான காலக் கணக்குகளை அடிப்படையில் கொண்டு கணிக்கப்படுகிறது.

ஸௌரமானம்

ஸௌரமானம் என்பது, ராசி மண்டலத்தைச் சுற்றி ஸூரியன் ஸஞ்சரிப்பதாகக் காணப்படும் கதியைச் சார்ந்த காலக் கணக்காகும்.

ராசி மண்டலம் என்பது என்ன?

ராசி மண்டலம் என்பது ஒரு கற்பனையான விண்வெளிக் கோளமாகும். அதன் ஊடே எல்லா க்ரஹங்களும் அவற்றின் சுற்றுப் பாதைகளில் பயணம் செய்கின்றன.

ஸூரியன், பூமியும் இதர கோள்களும் சுற்றி வரும் பாதையின் மத்தியில் இருக்கிறது. பின்னணியாக நிலைத்து இருக்கும் நக்ஷத்ரக் கூட்டத்தை முன்னிட்டு அளவெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வட்டவெளியானது பன்னிரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் 30 கோணத்தில் அமைந்து ராசிகள் என்று கூறப்படும் ராசி சின்னங்களாக இருக்கின்றன. ‘மேஷம்’ என்னும் இடத்தில் ராசி மண்டலம் பூமத்ய ரேகையைக் குறுக்கிட்டுச் செல்கிறது. இதுவே ராசிகளில் முதலாவதானதாகும். இதைப் பின்பற்றி வரும் ராசி சின்னங்கள் ரிஷபம், மிதுனம், கடகம், ஸிம்ஹம், கன்யா, துலாம், வ்ருச்சிகம், தனுஸு, மகரம், கும்பம், மீனம் ஆகும். மேற்கத்திய ஜோதிட சாஸ்திரத்தில் இருக்கும் எல்லா ராசி சின்னங்களின் பெயர்களும் இந்த ஸம்ஸ்க்ருதப் பெயர்களின் மொழி பெயர்ப்புகளே ஆகும்.

ஸூரிய கதியைச் சார்ந்த ஒரு ஸௌரமான மாதம், ஸூரியன் ஒரு ராசியைக் கடந்து செல்லத் தேவையான காலத்தையும் முப்பது(30) உதயங்களையும் மறைவு களையும் குறிப்பதாகும். ஸூரியன் ஒரு நாளில் (24 மணிகள்) ஒரு கோண அளவு நகர்ந்து, ஒரு மாதத்தில் ஒரு ராசியைக் கடக்கிறது. ஸூரியன் ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்குள் பிரவேசிக்கும் போது **‘ஸங்க்ராந்தி’** அல்லது **ஸங்க்ரமணம்** என்று அறியப்படுகிறது. **ஸங்க்ரமணம்** என்றால் **‘நகர்ந்து செல்லுதல்’** என்று பொருள். எந்த ராசியில் ஸூரியனின் பயணம் ஆரம்பிக்கிறதோ அந்த ராசியின் பெயரே அந்த ஸங்க்ராந்திக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த நாள்

புனிதமாகக் கருதப்பட்டு ப்ரார்த்தனைகளுடனும் களிப்புடனும் கொண்டாடப்படுகிறது.

மகரராசியில் ஸூரியன் ப்ரவேசிக்கப்படும் போது வடக்கே உள்ள மகர ரேகைக்கு நேராக ஸூரியன் ப்ரகாசிக்கும் புண்யகாலமாக **'உத்தராயண ஸங்க்ராந்தி'** கொண்டாடப்படுகிறது.

'அயனம்' என்பது செல்லும் வழியைக்குறிக்கிறது.

'உத்தராயணம்' என்பது ஸூரியனின் வடதிசைப் பயணம் (வடதிசைச்செலவு) மகரராசியிலிருந்து மிதுனராசி வரை இருப்பதைக் குறிக்கிறது.


'தக்ஷிணாயனம்' என்பது ஸூரியனின் தென்திசைப் பயணம் (தென்திசைச்செலவு) கடகராசியிலிருந்து தனுர்ராசி வரையில் உள்ளதாக இருக்கிறது.

ஸௌரமான முறை பஞ்சாங்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கு புது வருடம், ஸூரியன் மேஷ ராசியில் ப்ரவேசிக்கும்போது ஆரம்பமாகிறது.

சாந்த்ரமானம்.

பூமியைச் சுற்றிவரும் சந்திரனின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் கால அளவு **'சாந்த்ரமானம்'** ஆகும்.

சந்திரன், பூமியைச் சுற்றிவரத் தேவையான காலம் ஒரு சந்த்ர மாதமாகும். அது, இரண்டு பௌர்ணமிகள் அல்லது இரண்டு அமாவாசைகளுக்கு (அமாவாஸ்யை) இடையே உள்ள கால அளவாகும். ஒரு அமாவாசைக்கும் ஒரு



உத்தராயணம் தக்ஷிணாயனத்தைக் காட்டும் படம்

இந்தப் படத்தில் அடைப்புக் குறிக்குள் அந்தந்த மாதங்களுக்குரிய ராசிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

. . . .

பௌர்ணமிக்கும் இடையே அல்லது ஒரு பௌர்ணமிக்கும், அமாவாசைக்கும் இடையே உள்ள காலம் **'பக்ஷம்'** என்று கூறப்படும் இரண்டு வாரங்களாகும்.

ஸூரியன், சந்திரன் இரண்டின் தீர்க்க ரேகைகள் ஸமமாக இருக்கும் போது அல்லது சந்திரன் ஸூரியனுக்கு மிக அருகில் இருக்கும் காலம் அமாவாசையாகும். (அமாவாஸ்யை - 'அமா' நெருக்கம், 'வாஸ்யை' என்றால் வஸித்தல் (அ) இருத்தல் என்று பொருள்.)

ஸூரிய சந்திரனின் தீர்க்க ரேகைகளுக்கிடையே 180°வித்யாஸம் இருக்கும் போது அல்லது சந்திரன், ஸூரியனை விட்டுத் தொலைவில் இருக்கும் காலம் பௌர்ணமி ஆகும்.

அமாவாசையிலும் பௌர்ணமியிலும் முறையே தீபாவளி, குருபூர்ணிமா போன்ற சில முக்கிய பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அமாவாசை தினத்தன்று கும்பமேளா கொண்டாடப்படுகிறது.

சித்திரை 1ஆம் தேதியும் ஐப்பசி 1 ஆம் தேதி விஷு புண்ய காலம் என்றழைக்கப்படும்.

ஸூரிய பகவான் தென்திசையிலிருந்து வடதிசை நோக்கிப் பயணம் செய்யும் காலமே 'உத்தராயணம்' எனப்படும். தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய ஆறு (6) மாதங்களும் உத்தராயண காலமாகும். நம் ஆறுமாத காலமானது தேவர்களுக்கு ஒரு பகல் பொழுதாகும். உத்தராயண (பகல்) காலம் மிகவும் புனிதமான காலமாகும்.

தான் விரும்பினால் மட்டுமே சாகக்கூடிய **'இச்சா ம்ருத்யு'** என்னும் வரத்தை பீஷ்மர் தன் தந்தை சந்தனுவிடமிருந்து பெற்றிருந்தார். பீஷ்மர் அந்த வரத்தின் மூலம் உத்தராயண காலத்தில் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.'

மஹாபாரதப் போர் மார்கழி மாதம் நடைபெற்றது. மார்கழி மாதம் தக்ஷிணாயன காலமாகும். பீஷ்மர் அம்புப் படுக்கையிலேயே மார்கழி மாதம் முடிய இருந்து பின்னர் உத்தராயணத்திலே உடலை உகுத்தார்.

ஸூரியபகவான் வடதிசையிலிருந்து தென்திசை நோக்கிப்பயணம் செய்யும் காலமே தக்ஷிணாயனக் காலமாகும். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறுமாதங்கள் தக்ஷிணாயனக் காலமாகும். ஆடி 1 ஆம் தேதியன்று தக்ஷிணாயன ஆரம்பமாகும். தக்ஷிணாயன ஆறுமாத காலம் தேவர்களுக்கு இரவுப் பொழுதாகும்.

ஹிரண்யவதம், இராம- இராவண யுத்தம், மஹாபாரதப் போர் ஆகிய மூன்றும் தக்ஷிணாயனக் காலத்தில்தான் நடைபெற்றன. ஹிரண்யவதம் புரட்டாசி மாதமும். ராவணவதம் ஆடிமாதமும், மஹாபாரத யுத்தம் மார்கழி மாதமும் நடைபெற்றன.

உத்தராயணமும் தக்ஷிணாயனமும் சேர்ந்து, நமக்கு ஒரு வருடமாகும்; தேவர்களுக்கு ஒரு நாளாகும்.

நமது சக்தியின், நமது ஆற்றலின் ஆதாரம் அந்த எல்லையற்ற பரம்பொருள்தான்; நீர்க்குமிழியான நானும் மலையளவு பெரிய அலையான நீங்களும் இருவருமே அதிலிருந்து வேண்டிய அளவு பெற முடியும். எனவே முதலில் உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்.

- ஸ்வாமி விவேகானந்தர்


மீனம் பூரட்டாதி 4ஆம்பாதம் உத்திரட்டாதி ரேவதி	**மேஷம்** அச்வினி, பரணி க்ருத்திகை 1ஆம் பாதம்	**ரிஷபம்** க்ருத்திகை 2,3,4-ஆம் பாதம் ரோகிணி மிருகசீர்ஷம் 1,2ஆம் பாதம்	**மிதுனம்** மிருகசீர்ஷம் 3,4, ஆம் பாதம் திருவாதிரை புனர்பூசம் 1,2,3 ஆம் பாதம்.
கும்பம் அவிட்டம் 3,4ஆம் பாதம் சதயம் பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்	**ராசி**		**கடகம்** புனர்வஸு 4 ஆம் பாதம். பூசம் ஆயில்யம்
மகரம் உத்திராடம் 2,3,4ஆம் பாதம். திருவோணம் அவிட்டம் 1,2 ஆம் பாதம்	**மண்டலம்**		**ஸிம்ஹம்** மகம் பூரம் உத்தரம் 1ஆம் பாதம்
தனுஸு மூலம் பூராடம் உத்திராடம் 1-ஆம் பாதம்.	**விருச்சிகம்** விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம் கேட்டை	**துலாம்** சித்திரை 3,4ஆம் பாதம். ஸ்வாதி விசாகம் 1,2,3 ஆம் பாதம்	**கன்னி** உத்தரம் 2,3,4 -ஆம் பாதம்.ஹஸ்தம் சித்திரை 1,2-ஆம் பாதம்

நக்ஷத்திரங்கள் இருபத்தேழும்(27) பன்னிரண்டு(12) ராசிக்கும் பங்கிடப்பட்டிருக்கின்றன. அதாவது ஒவ்வொரு ராசிக்கும் 2¼ நக்ஷத்ரம், ஒவ்வொரு நக்ஷத்ரத்திற்கும் நான்கு (4) பாதங்கள் உண்டு. ஆகவே ஒவ்வொரு ராசியிலும் ஒன்பது (9) பாதங்கள் அல்லது 2¼ நக்ஷத்ரங்கள் உண்டு.

உங்களிடம் நம்பிக்கை வையுங்கள், திடமான நம்பிக்கைகளே பெரும் செயல்களுக்கு வழி வகுக்கின்றன.

- ஸ்வாமி விவேகானந்தர்

நக்ஷத்ரங்கள்		
1 அச்வினி	10 மகம்	19 மூலம்
2 பரணி	11 பூரம்	20 பூராடம்
3 க்ருத்திகை	12 உத்தரம்	21 உத்திராடம்
4 ரோஹிணி	13 ஹஸ்தம்	22 திருவோணம்
5 ம்ருகசீர்ஷம்	14 சித்திரை	23 அவிட்டம்
6 திருவாதிரை	15 ஸ்வாதி	24 சதயம்
7 புனர்பூசம்	16 விசாகம்	25 பூரட்டாதி
8 பூசம்	17 அனுஷம்	26 உத்திரட்டாதி
9 ஆயில்யம்	18 கேட்டை	27 ரேவதி

ராசிகளின் பெயர்கள்	
 மேஷம்	 துலாம்
 ரிஷபம்	 வ்ருச்சிகம்
 மிதுனம்	 தனுஸு
 கடகம்	 மகரம்
 ஸிம்ஹம்	 கும்பம்
 கன்னி	 மீனம்

இப்போது நாம் எந்த மதஸ்தர்கள் விஞ்ஞான சாஸ்திரம் வளர முடியாதபடி விஞ்ஞானிகளை 'ஹெரிடிக்' என்று சொல்லிக் கொளுத்தினார்களோ, அதே மதஸ்தர்களோடு சேர்ந்து கொண்டு "இந்தியாவின் ஸயன்ஸ் வளராததற்குக் காரணம் ஹிந்து மதம்தான், பரலோகம் பரலோகம் என்று சொல்லிக் கொண்டு ஹிந்து மதம் இந்த லோகத்து விஷயங்களையெல்லாம் அலக்ஷ்யம் செய்து விட்டது" என்று குற்றம் சொல்கிறோம்! வாஸ்தவத்தில் அத்தனை ஸயன்ஸுகளும் நம் சாஸ்திரங்களிலே இருக்கின்றன.

- தெய்வத்தின் குரல் 2ஆம் பாகம்,
மஹா பெரியவாளின் அமுத வாக்கு.

★ heretic - the upholder of a heresy. heresy means a belief contrary to the authorised teaching of one's natural religious community. an opinion opposed to the usual or conventional belief.

எல்லையற்ற சக்தியும், எல்லையற்ற ஊக்கமும், எல்லையற்ற தைரியமும், எல்லையற்ற பொறுமையும் நமக்கு வேண்டும். அப்போதுதான் மகத்தான விஷயங்களைச் சாதிக்க முடியும்.

- ஸ்வாமி விவேகானந்தர்

8. ஹிந்து மத உபாக்யானம்

(கதைக் கருவூலம்)

இராமாயணம்

அயோத்தியா காண்டம்

தசரதர், தனக்கு வயதாவதைக் கண்டு, அரியணைக்கு வாரிசாக ராமரை இளவரசனாகப் பதவியில் அமர்த்த விருப்பப்பட்டார். தன்னுடைய தேசத்தில் உள்ள சிற்றரசர்களை அழைத்து இந்த விஷயத்தைப் பற்றி அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டார். ஒவ்வொருவரும், ராமரிடம் ஒரு அரசனுக்குரிய பண்புகள் நிறைந்து இருப்பதைக் கண்டு, தசரதருடைய விருப்பத்திற்கு சம்மதித்தனர். மேலும் ஒருநாள் கூட தாமதிக்க தசரதர் விரும்பாமல், மறுநாளே ராமருக்கு முடிசூட்டிவிடத் தீர்மானித்தார். தசரதர், ராமரை அழைத்து அவரை மறுநாள் இளவரசனாக முடிசூட்டப் போகும் தீர்மானத்தைக் கூறி, நாட்டை ஆளுவதற்கான சில முக்கிய அறிவுரைகளையும் வழங்கினார். ராமர் அந்த நல்ல செய்தியைக் கௌஸல்யாவிடம் கூறியபோது, அவருக்கு ஆசிகளை அவள் வழங்கினாள். ராமருக்கும் சீதைக்கும் வசிஷ்டர் மந்திரபூர்வமாக ''உபவாச ஸங்கல்பத்தை'' அளித்தார். அதற்குப் பிறகு அவர்கள் அந்த இரவில், உண்ணாமல் இருக்கும் நோன்பை மேற்கொண்டனர். நகரம் முழுவதும் வர்ணங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. ஆனந்தமும், உற்சாகமுள்ள சூழ்நிலையில் அயோத்தி மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தது.

அயோத்தியின் தெருக்களில் நடப்பவற்றைக் கைகேயியின் அந்தரங்கப் பணிப்பெண்ணான, கூன் முதுகுடைய மந்தரை, தன்னுடைய இருப்பிடத்தின் மேல் தளத்திலிருந்து பார்வையிடச் சென்றாள். எங்கும் களிப்பும் கொண்டாட்டமாகவும் இருந்ததை நோக்கினாள். மேலும் ராமர், இளவரசராக முடிசூட்டப்படப் போவதையும் தெரிந்து கொண்டாள். கௌஸல்யாவின் மகன் அரியாசனத்தில் அமர்ந்தால், தான் அற்பமானவளாகி விடுவோம் என்று பயமுற்றாள். அவளுடைய சதிகார மனம், எல்லாக் கொண்டாட்டங்களையும், சடங்குகளையும் தடை செய்வதற்கு உடனேயே ஒரு திட்டத்தைக் கண்டுபிடித்தது. அதை நிறைவேற்ற கைகேயியின் அரண்மனைக்குச் சென்றாள். கைகேயியின் மனதில் பலவிதமான கருத்துக்களைத் திணித்து ராமர் அரசனாவதில் உள்ள அபாயங்களை மந்தரை சுட்டிக்காட்டினாள். கைகேயியினால் மந்தரையின் மனப்பான்மையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்குப் பதிலாக ராமர் அரசனாகப் போவதில் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்த மந்தரைக்கு விலை உயர்ந்த பரிசுகளை அளித்தாள். ஆனால் மந்தரை மெதுவாகவும், உறுதியாகவும், கருத்துக்களை ஒன்றுடன் ஒன்றை சாமர்த்தியமாக இணைத்து, தக்கவாறு எடுத்துச் சொல்லி, கைகேயியின் மனதில் கௌஸல்யாவிற்கு எதிராகப் பொறாமை என்ற விஷத்தை விதைத்துவிட்டாள். பாட்டனாருடன் சிறிது காலம் கழிக்க பரதனை கேகய நாட்டிற்கு அனுப்பியது, பிறகு பரதன் இல்லாத சமயத்தில் ராமனுக்கு முடிசூட்டத் தீர்மானித்தது, இவையெல்லாம் தசரதரின் தீய திட்ட

அமைப்பு என்று மந்தரை, கைகேயிக்குத் தவறாகச் சுட்டிக் காட்டினாள். இவ்வாறு கைகேயி மனதில் சந்தேகத்திற்கு இடமின்றி, காரண காரியங்கள் மூலம் நம்பவைத்து, அவளது மனதை மாற்றி அவள் உள்ளத்தை மந்தரை கெடுத்து விடுகிறாள். மேலும் ஒரு சமயத்தில் தசரதர் அசுரர்களுடன் போரிடும் போது, அவரது உயிரைக் காப்பாற்றியதற்காக அவர் அவளுக்களித்த இரண்டு வரங்களை இப்போது உபயோகப்படுத்தும்படி அவளைத் தூண்டியும் விட்டாள். ஒரு வரத்தின் மூலம் ராமனைக் காட்டிற்கு அனுப்பவேண்டுமென்றும், மற்றொரு வரத்தின் மூலம் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும் கேட்கும்படி கைகேயியிடம் கூறி, மிகவும் உறுதியுடன் இருந்து அந்த வரங்களை தசரதரிடமிருந்து பெறவேண்டுமென்று ராணியை மந்தரை எச்சரிக்கையும் செய்தாள்.

முடிசூட்டு விழாவிற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு தசரதர் தன்னுடைய விருப்பமான ராணி கைகேயியின் அந்தப்புரத்திற்குச் சென்றார்; அங்கே, கைகேயியை அவள் கோபமுறும் போதும் நாடும் இடமான 'கோபகிருஹ'த்தில் பார்த்தபோது ஆச்சரியப்பட்டார். கைகேயி ஆபரணங்களை எல்லாம் கழற்றி எறிந்து விட்டு, தரையில் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து தசரதர் மனக்குழப்பமடைந்தார். அவளுடைய துக்கத்திற்குக் காரணமென்ன என்று சொல்லும்படி அவளிடம் தசரதர் வேண்டினார். அவளுக்களித்த வரங்களைக் கொடுத்து நிறைவேற்றுகிறேன் என்ற வாக்குறுதியை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டபின், அந்த வரங்களை வாங்கிக் கொள்ள அவள் முன்வந்தாள். பரதன்

இளவரசனாக ஆக வேண்டுமென்றும் ராமர் பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்ய வேண்டுமென்றும் அவள் கூறினாள்.

தன்னுடைய ராணியின் கொடூரமான கோரிக்கைகளைக் கேட்டு தசரதர் அதிர்ச்சியுற்றார். ராமரை நாடு கடத்துவதைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் கேட்கும்படி கைகேயியை தசரதர் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். கைகேயி மனமிரங்கவேயில்லை. இவ்வாறு அன்று இரவு முழுவதும் கடுந்துயரத்திலும் அர்த்தமற்ற பேச்சிலும் கழிந்தது.

மறுநாள் காலையில், சடங்குகளைச் செய்வதற்காக அரசரை அழைக்கும்பொருட்டு அமைச்சர் ஸுமந்திரர் கைகேயியின் அரண்மனைக்குச் சென்ற போது ராமரை உடனடியாக அழைத்துவரச் சொல்லும் படி அவருக்கு ஆணையிடப்பட்டது. ராமர் வந்தவுடன், அவரிடம் தசரதர் தனக்கு அளித்த வாக்குறுதிகளையும், தசரதர் கட்டுப்பட்டுள்ள தன்னுடைய இரண்டு வரங்களையும் பற்றி கைகேயி கூறினாள். தந்தையின் வாக்கை தான் நிறைவேற்றுவதாக ராமர் உறுதியளித்து, அவளுடைய ஆசிகளை வேண்டினார். துயரத்துடன் கூடிய தந்தையைவிட்டுச் செல்ல மனமில்லாத போதிலும், தகப்பனாரின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்ற கடமையினால் கட்டுப்பட்ட ராமர், தன்னுடைய தாயான கௌஸல்யாவிடம் விடை பெறுவதற்காக, அந்த இடத்தை விட்டுச் சென்றார். அரண்மனையை விட்டு வனத்திற்குப் போகவேண்டுமென்ற ராமரின் உறுதியான

மனநிலையை, கௌஸல்யாவின் கண்ணீருடன் கூடிய வேண்டுகோளால் கூட அசைக்கமுடியவில்லை. கௌஸல்யாவின் துயரத்தை லக்ஷ்மணனால் தாங்கவே முடியவில்லை. தன்னுடைய சகோதரனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு லக்ஷ்மணன் கோபத்தினால் கொதித்தெழுந்தான். கௌஸல்யாவின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு, ராமர் சீதைக்கு இச்செய்தியை அறிவிப்பதற்காகச் சென்றார். உண்மையான பதிவிரதையாக, சீதையும் ராமருடன் வனத்துக்குச் செல்லத் தீர்மானித்தாள். பிடிவாதமாக ராமருடன் தானும் வனத்திற்குச் செல்வதற்குத் தீர்மானித்த லக்ஷ்மணனை ராமரால் தடுக்கவே முடியவில்லை. நடந்த சம்பவங்களால் நகரம் முழுவதும் துயரமுற்றது. அரண்மனையில் ராமர் விடைபெறும் நிகழ்ச்சி வருத்தத்தைத் தருவதாக இருந்தது. உள்ளம் உடைந்து, விம்மி அழுது கொண்டு தசரதர் நுழைவாயிலில் நின்று கண்ணுக்கெட்டும் தூரம் வரை ராமர் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார். ராமரை ஏற்றிச் சென்ற ரதத்தின் கொடி மறைந்தபின் துயரத்தால் பாதிக்கப்பட்டு நினைவற்று தசரதர் கீழே விழுந்தார். கன்றைப் பிரிந்த பசுவைப் போல கௌஸல்யா தேரின் பின் ஓடினாள். ராமரை தொடர்ந்து சென்ற அயோத்தி மக்கள் தம்முடைய அரசகுமாரனுடன் செல்வதற்கு, ரதத்தைச் செலுத்தும் ஸுமந்திரரை மெதுவாக போகும்படி கெஞ்சினார்கள். அவர்கள் எல்லோரும், தமஸா நதிக்கரையை அடைந்ததும், ராமர் அந்த இடத்தில் இரவைக் கழிக்கத் தீர்மானித்தார். மக்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கும் போது, நடு இரவில், ராமர்

எழுந்திருந்து, அவர்கள் மூவரையும் நதியின் அக்கரைக்கு அழைத்துச் செல்லுமாறு ஸுமந்திரரிடம் கூறினார். நதியைக் கடந்தபின், ஸுமந்திரரரை ரதத்துடன் தனியாக அக்கரைக்குப் போகச்சொல்லி, பிறகு திரும்புமாறு சொன்னார். ஏனெனில், மக்கள் அப்போதுதான் ராமர் அயோத்தி திரும்பிவிட்டார் என்று நினைப்பார்கள் என்று ராமர் கருதினார். ஸுமந்திரரும் அவ்வாறே செய்தார்.

அதற்கு மறுநாள் அவர்கள் காட்டிற்குள் வெகுதூரத்திற்குப் பயணம் செய்தார்கள். கங்கை நதிக்கரையை அடைந்தவுடன் அவர்களை வனவாசிகளின் தலைவனான குகன் மிக அன்புடனும், பக்தியுடனும் வரவேற்றான். அவர்கள் வனத்தில் தங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துவிட்டு மறுநாள் அவர்கள் கங்கையைக் கடந்தபின் விடைபெற்றான். ராமர் புறப்பட்டுச் செல்லும் முன் ஸுமந்திரரை அயோத்திக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறினார். ஸுமந்திரர் திரும்பி அயோத்திக்குச் சென்று, ராமர் உண்மையாகவே வனவாசத்தை மேற்கொண்டு விட்டார் என்று கைகேயிக்கு விவரிக்கவேண்டும்; இல்லாவிட்டால் கைகேயி தசரதருக்கு வேறு ஏதாவது தீங்கை விளைவிக்கலாம்; ஆகையால் தசரதருக்காக ஸுமந்திரரை திரும்பிப் போவதற்கு ராமர் இணங்க வைத்தார். விருப்பமில்லாமல், கண்களிலிருந்து கண்ணீர் வடிய ஸுமந்திரர் ராமரிடமிருந்து விடைபெற்றார்.

பிறகு ராமர், சீதை, லக்ஷ்மணன் மூவரும் பரத்வாஜ ஆசிரமத்திற்குச் சென்றனர். ராமர் தன்னை பரத்வாஜ

முனிவருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டு அவரது ஆசிகளை வேண்டினார். பிரயாகை நதியின் தெற்கேயுள்ள, அழகான இடமான சித்திரக் கூடத்தை வர்ணித்து, அவர்களை அங்கே செல்லுமாறு அவர் அறிவுரை வழங்கினார். லக்ஷ்மணன், அவர்களுக்கு ஓலையினாலும், புல்லினாலும் கூரை வேய்ந்து மரத்தினால் ஒரு குடிலைக் கட்டிக் கொடுத்தான். ''வாஸ்து சாந்தி'' என்ற சடங்கைச் செய்தபிறகு தம்முடைய எளிமையான வனவாசத்தை மூவரும் தொடங்கினர்.

அயோத்தியில் எங்கும் துயரமும், இருளும் சூழ்ந்த நிலையாக இருந்தது. ராமர் காட்டிற்குச் சென்று ஆறுதினங்கள் கழிந்து விட்டன. தனக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு சாபத்தை நினைவு கூர்ந்த தசரதர், அதைக் கௌஸல்யாவிடம் கூறினார்.

தசரதர் இளம் அரசகுமாரனாக இருந்தபோது ஒரு சமயம் வேட்டையாடச் சென்றிருந்தார். குறியைப் பார்க்காமலேயே, அதன் சத்தத்தைக் கேட்டே தவறாமல் குறியின் மேல் அம்பை எய்தும் திறன் அவருக்கு உண்டு. சரயு நதிக்கரையை அடைந்தவுடன், ஒரு விலங்கு தண்ணீர் குடிக்கும் 'கல கல' என்ற ஒலியைக் கேட்டார். உடனே அந்த ஒலி வரும் திக்கை நோக்கி ஒரு அம்பை விடுத்தார். துரதிருஷ்டவசமாக அந்த இலக்கானது, நதியிலிருந்து நீரைச் சேகரித்துக் கொண்டிருந்த ச்ரவணகுமாரன் என்ற சிறுவனாக இருந்தது. இறந்து கொண்டிருக்கும் சிறுவனைப் பார்த்தபோது தசரதருக்கு ஆழ்ந்த வேதனை உண்டாகியது. அந்தச் சிறுவன்,

தசரதரிடம் வெகுதாகத்துடனிருக்கும் தன்னுடைய வயதான, கண் தெரியாத பெற்றோர்களுக்கு உடனே தண்ணீரை எடுத்துச் செல்லுமாறு கூறிவிட்டுத் தன் இறுதி மூச்சை விட்டான். அந்தச் சிறுவனின் பெற்றோர்களுக்கு நதிக்கரையை அடைய வழிகாட்டி, அவர்கள் மகனுக்கு இறுதிக்கடன்கள் செய்வதற்கும் தசரதர் உதவினார். ஒரே ஓர் ஆதரவாக இருந்த அருமை மகனை இழந்ததனால் மிகவும் துயருற்று, தசரதரும் அவ்வாறே அவர் மகனைவிட்டுப் பிரிந்த சோகத்தினால், வேதனையினால் இறந்து போவார் என்று அவர்கள் சபித்தனர்.

அந்தச் சாபம் இப்போது நிறைவு அடையப்போகிறது என்று தசரதர் பயந்தார். விரைவில் தசரதரும் அவருடைய அருமை மகனின் பிரிவினால் ஏற்பட்ட துக்கத்தில் உயிரிழந்தார். பரதனை அழைத்து வருமாறு கேகய நாட்டிற்கு வசிஷ்டர் தூதர்களை அனுப்பினார். அயோத்தியில் நுழைந்த உடனேயே ஏதோ துயரமான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்பதை பரதன் உணர்ந்தான். கைகேயியின் இருப்பிடத்திற்குச் சென்றான். தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டதும், அவருடைய இழப்பை நினைத்து மிகவும் வருத்தப்பட்டான். மற்ற செய்திகளையும் கைகேயி அவனிடம் சொன்னபோது, பரதனின் துயரம் தாயின் மீது கோபமாக மாறியது. தாயிடம் ஆழ்ந்த வெறுப்படைந்து, பரதன் மன்னிக்கத்தகாத வன்மொழியில் அவளைப் பழித்தான். அவன் கௌஸல்யாவைக் காணச் சென்றபோது, அவனுக்கு நாடாளுவதில் விருப்பம் என்று அவள் குற்றஞ்சாட்டினாள். இந்த உண்மையற்ற

குற்றச்சாட்டினால் மனமுடைந்த பரதன் தான் குற்றமற்றவன் என்பதைப் புரிந்து கொள்ளுமாறு வேண்டினான். எண்ணையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தந்தையின் உடலைப் பார்க்க மிகுந்த வருத்தத்துடன் சென்றான். பின்னர் அவருடைய ஈமக் கடன்களைச் செய்தான். பதின்மூன்றாவது நாளின் சடங்குகள் முடிந்ததும், தந்தையின் மரணத்தினாலும், ராமர் இல்லாமல் இருப்பதாலும் வெற்றிடமாக இருக்கும் அரியாசனத்தில் அமரும்படியாக வசிஷ்டர் பரதனை வேண்டினார். பரதன் நாட்டை ஆளுவதற்கு மறுத்து, ராமரைக் காட்டிலிருந்து அழைத்து வந்து அரசனாக முடிசூட்டப் போவதாகச் சபதம் எடுத்துக் கொண்டான்.

பரதன் வனத்துக்கு செல்லும் பயணத்திற்காக பெரிய பரிவாரத்துடனும், சேனைகளுடனும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பரத்வாஜ முனிவர் வழிகாட்டியதால், சித்ரகூடத்தின் வழியை அவன் அறிந்தான். ராமரும், லக்ஷ்மணனும் சிறிது தூரத்தில் ஒரு பெரிய புழுதிப்படலம் ஆகாயத்தில் எழுப்பி, ஆசிரமத்தை நோக்கி வருவதைக் கண்டார்கள். லக்ஷ்மணன், ஒரு மரத்தின் மீது ஏறிப்பார்த்து அது பரதனுடைய சேனைதான் என்பதை அடையாளம் கண்டான். ராமரைக் கொல்வதற்காக பரதன் சித்ர கூடத்திற்கு வருகிறான் என்று கருதி, லக்ஷ்மணன் தன்னுடைய வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு சண்டையிடுவதற்குத் தயாரானான். ராமர், லக்ஷ்மணனைச் சாந்தப்படுத்தி, பரதனின் உயர்ந்த குணங்களை எடுத்துக்கூறி, அவனை சமாதானப்படுத்தினார். நாட்டைத் தன்னையே எடுத்துக் கொள்ளுமாறுக் கேட்பதற்காகவே பரதன் அங்கு வந்து

கொண்டிருக்கிறான் என்று ராமர் லக்ஷ்மணனிடம் கூறினார். தன்னுடைய அவசர முடிவை நினைத்து வெட்கப்பட்டு, ராமரின் பக்கத்தில் அடக்கத்துடன், கை கூப்பியவாறு லக்ஷ்மணன் நின்றார்.

பரிவாரங்களையும், சேனையையும் பின்னால் தங்க வைத்து விட்டு பரதன் ஆசிரமத்தை நெருங்கும்போது அவன் கண்களில் கண்ணீர் மல்கியது. இரண்டு ஸகோதரர்களின் சந்திப்பும் மிகவும் உருக்கமானதாக இருந்தது. தன்னுடைய உணர்ச்சிகளாலும், அன்பாலும், பக்தியாலும் ஆளப்பட்டு பரதன் வார்த்தைகளற்றவனாகி ராமரின் காலடியில் வீழ்ந்தான். தரையிலிருந்து அவனைத் தூக்கி, கண்ணீருடன் ராமர் அவனை ஆரத்தழுவினார். பெற்றோர் அயோத்தி மக்கள் ஆகியோர் நலத்தைப்பற்றி ராமர் அவனிடம் விசாரித்தார். தந்தை மரணமுற்ற செய்தியை பரதன் ராமரிடம் வெளியிட்டான். ராமரினால், துக்கத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை; அவருடைய இழப்புக்காகக் கண்ணீர் வடித்தான். மந்தாகினி நதியில் நீராடி, இறந்த தந்தைக்கு அன்ன பிண்டங்களையும், தீர்த்தத்தையும் அளித்தான்.


நாட்டிற்குத் திரும்பி வந்து அரியாசனத்தில் அமர்ந்து அவர்தான் அரசாள வேண்டுமென்று ராமரிடம் பரதன் கெஞ்சினான். வனத்திற்கு தான் வருகை தந்ததின் நோக்கம் அதுவே என்றும் கூறினான். ராமருடைய தயக்கத்தைப் பார்த்து, ராமர் திரும்பாவிடில் தன்னுடைய உயிரையே மாய்த்துக் கொள்வதற்காக பரதன் அச்சுறுத்தினான். ஆனால், ராமர் தன்னுடைய தந்தையின் வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பில் மிக

உறுதியாக இருந்தார். பிறகு அவர் பரதனிடம், கைகேயிக்கு தந்தை அளித்த வாக்குறுதியில் தன்னுடைய பங்காக வனத்திற்குச் செல்ல வேண்டியதை தான் நிறைவேற்றி விட்டதாகவும், பரதன் நாட்டை ஆள வேண்டும் என்ற மற்ற பகுதியை அவன் நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறினார். ராமருடன் பரதன் புரிந்த வாதங்கள், பலனற்றதாக இருந்ததால், ராமரின் பேரில் பரதன் நாட்டை ஆளட்டும் என்று வசிஷ்டர் யோசனை கூறினார்.

ராமர் நாட்டை ஆளுகின்ற அதிகாரத்திற்கு அடையாளமாக ராமருடைய காலணிகளான பாதுகைகளைப் பரதன் வேண்டினான்; மேலும் பதினான்கு வருடங்கள் முடிந்து ராமர் திரும்பும்வரை அரசாங்கத்திற்குத் தான் ஒரு பாதுகாவலன் தான் என்று உறுதியாகக் கூறினான். பரிவாரங்களும், சேனைகளும் அயோத்திக்குத் திரும்பின. ஆனால் பரதன் நந்தி கிராமத்தில் தங்கி, அங்கிருந்தே ராமருடைய பெயரில், மந்திரிகளுடைய உதவியின் மூலம் நாட்டை பரிபாலனம் செய்து வந்தான்.

பரதன் புறப்பட்டுச் சென்ற பிறகு நிகழ்ச்சிகளின் திருப்பங்களினால், சித்திர கூடத்தில் ராமர் மிக்க வருத்தம் அடைந்தார். அந்த இடம் எப்பொழுதும் அயோத்தி பற்றியும், பரதனுடைய வருகையையும், தந்தையின் மரணத்தையும் அவரது நினைவிற்கு கொண்டு வந்தது. அதனால் அவர்கள் அந்த இடத்தைவிட்டுச் செல்லத் தீர்மானித்து அத்ரி முனிவரின் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கு அவர்கள் மிகவும் அன்புடன் வரவேற்கப்பட்டனர்.

அத்ரி முனிவரின் பத்தினியான அனசூயாவை சீதைக்கு ராமர் அறிமுகம் செய்தார். சீதை அனசூயாவின் ஆசிகளைப் பெற்றாள். அனசூயா ஸீதைக்குப் பதிவிரதை தர்மத்தைப்பற்றி விவரமாக எடுத்துச் சொல்லி அறிவுரை கூறினார். ராமர் அவர்களிடம் விடைபெற்று, லக்ஷ்மணன் ஸீதையுடன் தண்டகவனத்தை அடைந்தார்.



ஓ சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அமரத்துவம் பெற்ற ஆன்மாக்கள். சுதந்திர ஆன்மாக்கள். அழியாத திருவருளைப் பெற்றவர்கள்.

- ஸ்வாமி விவேகானந்தர்

9. மந்திரங் கற்போம்

ப்ராதஸ்மரணம்

வைகறை வணக்கம்

தேவதா வந்தனம்

ப்[3]ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரீ
பா[4]னு: ஶஶீபூ[4]மி ஸுதோ பு[3]த[4]ஸ் ச |
கு[3]ருச் ச சுக்ர: ஶனி ராஹு கேதவ:
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரப[4]ாதம் ||

பொருள்: படைப்புக் கடவுளான ப்ரம்மதேவனும், 'முர' அஸுரனை வதம் செய்த காக்கும் கடவுளான ஸ்ரீ விஷ்ணுவும், திரிபுர அஸுரனை ஸம்ஹரித்த அழித்தல் கடவுளான சிவனும், ஸூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, ராஹு, கேது ஆகிய ஒன்பது கிரஹ தேவர்களும் என் காலைப் பொழுதை சுபமானதாகச் செய்யட்டும்.

விளக்கவுரை: வேதங்களின் கருத்தில், இறைவன்தான் படைப்பின் பேறறிவு, மூலப்பொருள் என்ற இரண்டு காரணங்களாகவும் இருக்கிறார். இக்கண்ணோட்டத்தில் அறிவு காரணத்தை **ஆணாகவும், பொருள்** காரணத்தை **பெண்ணாகவும்** படைப்பின் ஆண், பெண் என்னும் அம்சங்கள் குறிக்கின்றன.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல ஆக்கலும் அழித்தலும் ஒன்று சேர்ந்தாற் போல செல்கின்றன. இவற்றில் ஒன்று, மற்றது இல்லாமல் செயல்பட முடியாது. உண்மையில், ஒரு பொருளின் படைப்பில் அதை

உண்டாக்க உபயோகப்படும் பொருளின் மாற்றம் அல்லது அழிவு நிச்சயமாக ஏற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு களிமண் உருண்டையிலிருந்து ஒரு பானையின் வடிவம் உருவாக்கப்படும்போது அம்மண்ணின் உருண்டை வடிவம் அழிதலை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் ஆக்கலுக்கும் அழிவுக்கும் இடையே படைக்கப்பட்ட பொருளைக் காத்தல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்த மூன்று தொழில்களும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டதாக இருந்தாலும் வழிபடப்படுவதற்கு, ஒவ்வொரு செயல் மூலமாகவும் தனித்தனியாக இறைவன் எழுந்தருளச் செய்து துதிக்கப்படுகிறது.

படைக்கப்பட்ட உலகின் நோக்கு நிலையிலிருந்து ஒரே காலத்தில் நிகழும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று செயல்களுக்கு ஏற்றவாறு இறைவன் மூன்றுவித வடிவங்களைக் கொண்டவராகக் கருதப்படுகிறார்.

ஒவ்வொரு செயலின் அறிவான அம்சத்தைக் குறித்து ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற தெய்வங்களாக இறைவன் பார்க்கப்படுகிறார். ஒவ்வொரு செயலின் பொருள் அம்சமாக இந்தத் தெய்வங்களுக்கு ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி முறையே துணைவிகளாக இருக்கிறார்கள்.

1. படைத்தல் Generator ப்ரம்மா ஸரஸ்வதி

2. காத்தல் Organizer விஷ்ணு லக்ஷ்மி

3. அழித்தல் Destroyer சிவன்(ருத்ரன்) பார்வதி

இந்த மூன்று செயல்களின் முதல் எழுத்துகள் சேர்ந்ததே GOD கடவுள் என்ற ஆங்கிலச் சொல்லாக மலர்ந்தது என்பர்.

பிரம்ம தேவன் :

பிரம்ம தேவன் (ப்ரம்மா) படைக்கும் தொழிலுக்குரிய தெய்வமாக இருக்கிறார். **'வளர்தல்'** என்ற பொருளைக் கொண்ட **'ப்[3]ருஹு'** என்ற வினைச் சொல் மூலத்தி லிருந்து **'ப்ரஹ்மா'** (ப்ரம்மா) என்னும் சொல் வருவிக்கப்பட்டிருக்கிறது. வளர்ச்சியை விளைவிப்பவர் எவரோ அவரே (ப்ரம்மா) என்பதைக் குறிக்கிறது.

புராணங்களில் பிரம்மதேவனுக்கு நான்கு தலைகள் இருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. இவை நான்கு திசைகளை அல்லது நான்கு வேதங்களைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. படைப்பின் ஆரம்ப காலத்தில் விஷ்ணுவின் நாபியிலிருந்து பிரம்மதேவன் பிறந்ததாகக் கூறப்படுகிறது.

படைப்பைப் பற்றிய அறிவு ஒருவருக்கு இருந்தால்தான் படைப்பு நிகழக்கூடும். பிரம்மதேவன் படைப்பாளியாக இருப்பதால் படைப்பிற்குத் தேவையான அறிவுடன் ஒருங்கிணைந்து இருக்கிறார். அவரது துணைவி ஸரஸ்வதி எல்லாவித அறிவையும் குறிப்பிடுகிறாள்.

விஷ்ணு :

விஷ்ணு படைப்பைக் காத்துப் பேணுபவராக இருக்கிறார். **'விஷ்ணு'** என்ற சொல்லுக்கு **'இந்த உலகம் முழுவதையும் வ்யாபித்து இருப்பவர்'** என்பது பொருளாகும். படைப்பைத் தாங்கிக் காக்கும் செயலை

விஷ்ணு செய்யும்போது படைப்பு முழுவதையும் ஆதரித்து அதில் நிறைந்திருக்கிறார். அவர் தர்மத்துக்கும் பாதுகாவலராக இருப்பவர்; அதர்மம் அளவு மீறி மேலெழும்பும் போது, மஹாவிஷ்ணு எவ்வாறு உலகில் அவதரித்து தர்மத்தைக் காத்து நிலைநாட்டுகிறார் என்பதை புராணங்கள் விவரிக்கின்றன. பல தலைகளை உடைய தன்னுடலை சுருளாகச் சுருட்டிக் கொண்டிருக்கும் ஆதிசேஷன் என்னும் நாகத்தின் மீது மஹாவிஷ்ணு யோக நித்திரையில் சாய்ந்திருக்கும் நிலையில் வர்ணிக்கப்படுகிறார். இத் தோற்றத்தில் அவர், படைப்பு வெளிப்படாத நிலையில் இருப்பதைக் குறிக்கிறார்.

சுருளாகச் சுற்றிக் கொண்டிருக்கும் ஆதிசேஷன், படைப்பின் உள்ளார்ந்த சக்தியை அடையாளமாகக் காட்டுகிறது. படைப்பு வெளிப்பட ஆரம்பிக்கும்போது படைத்தலுக்குரிய தெய்வமான பிரம்மதேவன், விஷ்ணுவின் நாபியிலிருந்து வெளிவந்து படைக்கும் தொழிலைத் துவக்குகிறார்.

படைப்பைத் தாங்கி, காப்பதற்குத் தேவையான சக்திகளான செல்வத்தையும் வளமையையும் விஷ்ணுவின் துணைவி லக்ஷ்மி குறிப்பிடுகிறாள். லக்ஷ்மி என்னும் சொல் தளராத ஊக்கத்தையும் விடா முயற்சியையும் கொண்டவரால் அடையக் கூடியவள் என்பதைக் குறிக்கிறது.

ருத்ரன் (சிவன்)

சிவபெருமானின் ஒரு வடிவம் ‘ருத்ரன்’. **‘ருத்ர’** என்னும் சொல்லிற்கு **‘எல்லாவற்றையும் அழிப்பவர்’** என்று

பொருள். படைப்பைப் பொறுத்தவரையில் ருத்ரர் அழிக்கும் தொழிலுக்குரிய தெய்வமாகச் சித்தரிக்கப் படுகிறார். சிவபெருமானுக்கு இன்னும் பல வடிவங்கள் உள்ளன. அவற்றுடன் ஒரு வடிவம்தான் குரு தக்ஷிணா மூர்த்தி. ஆத்ம அறிவிற்கு முதலாம் குருவான தக்ஷிணா மூர்த்தி ஒருவருடைய உண்மையான இயல்பைப் பற்றிய அறியாமையை அழித்து எதையும் சார்ந்திருப்பதிலிருந்து விடுபடுதலை அடைய உதவுகிறார்.

ஒடுக்குவதற்குப் பலமும் சக்தியும் அவசியமாக இருக்கிறது. சிவபெருமானின் துணைவியான பார்வதி பலத்தைக் குறிக்கிறாள். இதனால் அவள் '**சக்தி**' என்று அழைக்கப்படுகிறாள். **பார்வதி** என்னும் சொல்லுக்கு மலைகளுக்குரிய தேவி என்று பொருள்.

நவக்ரஹ தெய்வங்கள்

வேத பாரம்பர்ய கலாச்சாரத்தின் தனித்தன்மை வாய்ந்த இறைவழிபாடுகளில் ஒன்று இறைவனை க்ரஹ தெய்வங்களின் வடிவத்தில் துதிப்பதாகும். ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படும் ஸுக துக்கங்களுக்கும் க்ரஹ நிலைகளுக்கும் ஸம்பந்தம் உண்டு என்றும் அதில் க்ரஹ தெய்வங்கள் தங்கள் பங்கைப் புரிகின்றன என்றும் காணப்படுகிறது.

வேத தர்மத்திற்கு ஆதாரமாகிய பதினான்கு (14) சாஸ்திரங்களுள் அடங்கிய வேதாங்கங்களில் ஒன்றானது ஜ்யோதிஷ சாஸ்திரம்; அதில் வான சாஸ்திரம், ஜோதிஷ சாஸ்திரம் இரண்டும் அடங்கியுள்ளன.

ஒரு மனிதரின் வாழ்க்கை சம்பவங்களை, நாம் வாழ்கின்ற இவ்வுலகத்தின் ஸூரிய மண்டலத்தைச் சேர்ந்த க்ரஹங்களின் ஒழுங்கான பாங்குகளைக் கொண்ட இயக்கங்களுடன் ஜ்யோதிஷம் ஸம்பந்தப்படுத்துகிறது. ஜ்யோதிஷம், ஒருவர் பிறந்த காலத்தின்போது இருக்கும் பல க்ரஹங்களின் நிலையை (ஜாதகம்) அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட **'வருவது உரைக்கும்'** சாஸ்திரமாக இருக்கிறது.

ஜ்யோதிஷம் பல வாழ்க்கை அனுபவங்களுடன் ஸம்பந்தப்பட்டதாக இருக்கும் ஒன்பது கிரஹங்களை அங்கீகரிக்கிறது. இந்த க்ரஹ தெய்வங்கள் (9) ராசி மண்டலத்தின் பன்னிரண்டு (12) சின்னங்களுக்கும் உரியதாக இருக்கின்றன.

நவக்ரஹ தெய்வங்கள்	காரகத்துவம்	ஆட்சி புரியும் ராசிகள்
1. ஸூர்ய தே^{3}வதா-ஸூரியன்	பித்ருகாரகன் (தந்தை)/ஆத்ம காரகன்	ஸிம்ஹம்
2. சந்த்^{3}ர தே^{3}வதா - சந்த்ரன்	மாத்ருகாரகன் (தாய்) /மனோகாரகன்	கடகம்
3. குஜ தே^{3}வதா - அங்காரகன் (செவ்வாய்)	ப்ராத்ருகாரகன் (ஸஹோதரன்)	மேஷம், விருச்சிகம்
4. பு^{3}த^4 தே^{3}வதா - புதன்	மாதுல காரகன் (மாமன்)/வித்யாகாரகன்	மிதுனம், கன்யா (கன்னி)
5. கு^{3}ரு தே^{3}வதா - வியாழன்	புத்ர காரகன் (மகன்)	தனுஸு, மீனம்
6. ஶுக்ர தே^{3}வதா - சுக்ரன்	களத்ரகாரகன் (மனைவி)	ரிஷபம், துலாம்
7. ஶனி தே^{3}வதா - சனி	ஆயுள்காரகன்	மகரம், கும்பம்
8. ராஹு தே^{3}வதா - ராகு	பிதாமஹகாரகன் (தந்தைவழி தாத்தா)	----
9. கேது தே^{3}வதா - கேது	மாதாமஹகாரகன் (தாய்வழி தாத்தா)	----

நவக்ரஹ தெய்வங்கள் ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று பார்க்காமல் குறிப்பிட்ட திசையை நோக்கியவாறு ஒரே பீடத்தில் கீழே கொடுத்துள்ளபடி இருக்கின்றன.

வடக்கு

	மேற்கு			கிழக்கு
	கேது ↓	குரு ↑	புதன் →	
மேற்கு	சனி ←	ஸூரியன் →	சுக்ரன் →	கிழக்கு
	ராகு ↓	குஜன் ↓	சந்திரன் ←	

தெற்கு

வடக்கு 1 - குரு

மேற்கு 2 - சனி, சந்திரன்

தெற்கு 3 - கேது, ராஹு, செவ்வாய் [குஜன்]

கிழக்கு 3 - ஸூரியன், புதன், வெள்ளி [சுக்ரன்]

ஸூரியன் நமக்கு நீண்ட ஆயுளையும் நல்ல ஆரோக்யத்தையும் கொடுக்கட்டும்,

சந்திரன் மங்காத கீர்த்தியையும்,

பூமியின் மகனான **அங்காரகன்** கவரும் அழகு, வளமையையும்

சந்திரனின் புதல்வனான **புதன்** புத்தி நுட்பத்தையும்

குரு மரியாதையையும்

கவியின் குணத்தைக் கொண்டவனான **சுக்ரன்** மிஞ்சமுடியாத, நடை நயம் வாய்ந்த பேச்சாற்றலையும்

மிதமான வேகத்தையுடைய **சனீஸ்வரன்** தொடர்ந்த இன்பங்களையும் களிப்புகளையும்

ராகு பலத்தையும் பகைவர்களின் நாசத்தையும்

கேது குடும்ப வளர்ச்சியையும்

- நமக்குக் கொடுக்கட்டும்.

மும்மூர்த்திகளையும், க்ரஹ தெய்வங்களையும் நற்காலையில் நமக்கு எல்லா மங்களங்களையும் அருளவே இந்த ஸ்லோகம் சொல்லப்படுகிறது.



தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள். தோல்விகள் இயற்கையானவை. வாழ்க்கைக்கு அழகு சேர்ப்பவை அவை. தோல்விகள் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? போராட்டம் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே அல்ல. அப்படிப்பட்ட வாழ்க்கையில் என்ன இனிமை இருக்கிறது? போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதீர்கள். ஒரு பசு பொய் சொல்வதை நான் கேட்டதில்லை; ஆனால் அது வெறும் பசுதான்; மனிதன் அல்ல! ஆகவே தோல்விகளை, சறுக்கல்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஆயிரம் தடவை லட்சியத்திலிருந்து வழுவ நேர்ந்தாலும் திரும்பத் திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள், ஆயிரம் தடவை தவறினாலும் இன்னொரு முறை முயலுங்கள்.

- ஸ்வாமி விவேகானந்தர்

10. கேள்வி ஞானம்

1. ஸம்ஸ்க்ருத மொழியின் இலக்கணமான வ்யாகரண சாஸ்த்ரத்தை இயற்றியவர் யார்?
2. அருணோதய காலம் என்பது எது?
3. எந்த திசையை நோக்கி அமர்ந்து சாப்பிடக் கூடாது?
4. திருப்பாற்கடலிலிருந்து மஹாலக்ஷ்மீ தோன்றிய நாள் எது?
5. 'காஞ்சி' என்ற ஸ்தல பெயருக்கு என்ன பொருள்?
6. வண்டு உருவம் கொண்டு சிவனை மட்டும் வலம் வந்த மஹரிஷியின் பெயர் என்ன?
7. தேவேந்திரன்கூட தன் மதிப்பை இழந்துவிடுகிறான். எதனால்?
8. எந்த திசையை நோக்கித் தீபம் ஏற்றக் கூடாது?
9. பரசுராமரின் தாயார் பெயர் என்ன?
10. ஆனி மாதத்துக்கு மிதுன மாதம் என்று ஏன் பெயர் வந்தது?

விடைகள்:-

1. பாணினி மஹரிஷி
2. ஸூர்ய உதயத்திற்கு நான்கு நாழிகை முன்பு முதல் (1 நாழிகை என்பது 24 நிமிடங்கள்)
3. வடக்கு திசை
4. வரலக்ஷ்மீ வ்ரதம் செய்யும் நாள்.

5. க = ப்ரம்மதேவனால், அஞ்சிதம் = பூஜிக்கப்பட்டது என்று பொருள்.

6. ப்ருங்கி மஹரிஷி. சென்னை மாநகரில் ப்ருங்கி மஹரிஷி வழிபட்ட கோயில் உள்ள இடம்தான் பரங்கிமலை. ப்ருங்கி மலையே பரங்கிமலை ஆனது. இன்றும் அவர் வழிபட்ட சிவபெருமானை நாம் வணங்கலாம்.

7. தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதால்.

8. தெற்கு திசை நோக்கித் தீபம் ஏற்றக் கூடாது.

9. ஜமதக்னி முனிவரின் மனைவி ரேணுகா தேவி.

10. ஸூரியன் மிதுன ராசியில் ஸஞ்சரிப்பதால்.

சாகும் வரை வேலை செய்யுங்கள். நான் உங்களுடன் உள்ளேன். நான் போனபிறகு என் ஆன்மா உங்களுடன் வேலை செய்யும். இந்த வாழ்வு வரும்; போகும். செல்வம், புகழ், போகங்கள் எல்லாம் சில நாட்களுக்கே, புழுவைப் போல் சம்சாரத்தில் உழன்று மடிவதை விட உண்மையைப் பிரச்சாரம் செய்தவாறே கடமை என்னும் களத்தில் உயிர் துறப்பது சிறந்தது. மிகச் சிறந்தது. முன்னேறுங்கள்.

- ஸ்வாமி விவேகானந்தர்

தர்ம ரக்ஷண ஸமிதிக்காக
எல்கேஎம் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் மூலம்
அச்சிட்டு வெளியிடுவோர்
K. பிரபாகர்,
64, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோடு,
எழும்பூர், சென்னை - 600 008.
போன் : 044-2819 2438